
பாக்கெட் நாவல்

பிப்ரவரி - 2002
விலை ரூ.6

# தொட்டதெல்லாம் பொன்!

## இந்திரா செளந்தர்ராஜன்





# தொட்டதெல்லாம் பொன்

இந்திரா சௌந்தர்ராஜன்

# தொட்டதெல்லாம் பொன்!

- இந்திரா சௌந்தர்ராஜன்

## 1

மழை விளாசித் தள்ளிக் கொண்டிருந்தது!

மார்கழி மாதம் என்பது பனிக் காலம். இந்த மாதத்தில் ஒரு மணி நேரத்திற்கு குறைவில்லாமல் மழை பெய்துகொண்டிருப்பதை என்னென்று சொல்வது?

காலச் சக்கரம் 'ஒரு ஒழுங்கில்லாமல்' சுற்றத் தொடங்கிவிட்டதாக யாரோ எப்பொழுதோ பேசியது சண்முகத்தின் நினைவில் பரவி ஓடியது.

அந்த அர்த்த ராத்திரி வேளையில் தூக்கம் வராதபடி புரண்டு கொண்டிருந்தவன் இடி சப்தம் கேட்டு கண்ணைத் திறந்திருந்தான். மழை தூர ஆரம்பித்தாலே கரண்ட் போயாகவேண்டும் என்பது அவன் குடியிருக்கும் ஏரியாவின் சாபக் கேடான விஷயம்.

எனவே ஆந்தைக்கண் போல மின்னிக் கொண்டிருந்த நைட் லைட்டும் அணைந்துபோய் - அவன் படுத்திருந்த அறையை இருட்டு கட்டித் தழுவிக் காதலித்துக் கொண்டிருந்தது.

நடுநடுவே வானத்தில் மின்னல் சவுக்குகளின் சொடுக்குச் சப்தம்! அதையும் மீறிக் கொண்டு அவன்

காதோரமாக மனிதர்களைத் தண்டிக்கவென்றே அவதாரம் எடுத்து அலைந்தபடி இருக்கும் கொசுக்களின் ரீங்காரக் கச்சேரி வேறு. வெறுப்பாக இருந்தது.

கண் இருந்தும் குருடனாக ஒருமனிதன் இருப்பது இந்த மாதிரி நேரங்களில் தான்.

'குருடு' என்பது எவ்வளவு பயங்கரமானது என்னும் கற்பனை வேறு இப்பொழுது சண்முகத்தைக் கவ்விக் கொண்டிருந்தது. பகல் முழுக்க மெக்கானிக் ஷெட்டில் பைக்குகளோடு போராடிய களைப்பு ஒருபக்கம், நடுநடுவே குண்டூசியால் குத்துவது போன்ற கொசுக் களின்தாக்குதல்வேறு. போர்வையை விரல்களால் தேடிப் பிடித்து உடம்புக்கும் தலைக்குமாக சேர்த்து போர்த்திக் கொண்டான். பாவம் கொசுக்கள்! ஒரு போர்வை மூட்டையாய் இருந்த அவனை சுற்றிச் சுற்றி வந்து ஊர்வலக்காரர்கள் கோஷம் போடுகிற மாதிரி கோஷம் போட்டுக் கொண்டிருந்தன. இந்த இக்கட்டான வேளையில் அவனுக்கு சட்டென்று அவன் அம்மா திலகத்தின் ஞாபகமும் வந்தது.

அந்த குச்சு வீட்டில் வழக்கமாய் சமையல் கட்டை ஒட்டிய வராண்டாவில் தான் அவள் எப்பொழுதும் படுப்பாள்.

இப்படி மழை கொட்டினால் நிச்சயம் அங்கெல்லாம் ஒழுகும். அவள் என்ன செய்து கொண்டிருக்கிறாளோ? கவலை வந்து பரவியது. எழுந்து சென்று எட்டிப்பார்க்க இருட்டு பெரிய இடைஞ்சலாக இருந்தது.

எனவே படுத்திருந்த இடத்தில் இருந்தே குரல் கொடுக்க ஆரம்பித்தான்.

''அம்மா...''

''சொல்லு ராசா... நீ இன்னும் தூங்கலையா?'' - பதில் குரல் படுவேகமாக வந்தது.

''எங்க தூங்க... இந்த கொசுக் கூட்டம் தூங்க விட்டாதானே?''

''போர்வையை எடுத்து நல்லா போர்த்திக்க ராசா...''

''அது சரி... நீ என்ன பண்ணிக்கிட்டிருக்கே?''

''அதான் ஒரு முழத்துக்கு ஒம்பது முழமா உடம்பைச் சுத்தி, கட்டிக்கிட்டிருக்கிறோமே அந்தப் புடவைதான் இப்ப எனக்கு போர்வை'' என்றாள் திலகம்.

மழையிடம் வேகம் கூடத் தொடங்கியிருந்தது.

காற்றும் தன்னிடம் இருப்பது பெரிய வாய் என்கிற மாதிரி ஊளையிட்டது.

''ஏம்மா... இப்படி மார்கழி மாசத்துலல்லாம் மழை பெய்யுமாம்மா?''

''பெய்யுதே... பாக்கறோம்ல?''

''கொடுமைம்மா... காலம் கெட்ட காலத்துல இப்படி மழை பேஞ்சா என்னாவறது? ஏற்கெனவே எங்கப்பார் காய்ச்சல் - குளிர்...''

''காலத்தை குறை சொல்லாதே... காரணம் இல்லாம எப்பவுமே எதுவுமே நடக்கறதில்லை.''

திலகம் கொஞ்சம் தத்துவமாய் பதில் சொன்னாள்.

''என்னா காரணம்... புடலங்கா காரணம். காலம் கெட்டுப் போச்சு. அதான் காரணம். ஒரு புத்தகத்துல கூட படிச்சேன், நாம குடி இருக்கற இந்த பூமிக்கு மேல இருக்கற ஆகாசத்துல ஓஸோன் படலம்கற பேர்ல ஒரு போர்வை இருக்குதாம். அது சூரியனோட கதிர்களை அப்படியே பூமிக்கு அனுப்பாம வடிகட்டி அனுப்புதாம். அப்படி அது அனுப்பறதாலதான் நாம சூரியனோட சூட்டை தாங்கிக்கிட்டு வாழ முடியுதாம். ஆனா இப்ப அந்த போர்வை கிழிஞ்சுக்கிட்டே வருதாம். அதனால சூரிய வெளிச்சம் அப்படியே உள்ள இறங்கி பூமியில் நிறைய மாறுதல்களாம். அதான்... பனிக் காலத்துல இப்படி மழை பெய்யுது.''

- சண்முகம் ஒரு விஞ்ஞானி போல பேசிவிட்டு கொஞ்சம் இருமினான்.

''ஏன் ராசா இருமறே... இன்னுமா உனக்கு அந்த இருமல் அடங்கல?''

''அது அடங்காது. கட்டைல என்னை வைக்கற வரை அது என் கூடவே இருக்கும்.'' - சண்முகத்தின் குரலில் அடப்பமான வருத்தம்.

ஆனால் திலகத்தால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்பது சில நிமிடங்களிலேயே தெரிந்தது. சமையல்கட்டில் திடீரென்று காடா விளக்கின் சுடர் ஒளி! அதைத் தொடர்ந்து ஸ்டவ் பற்ற வைக்கப்படும் சப்தம் அவன் காதில் விழுந்தது.

''அம்மா என்ன பண்றே?''

''ஒண்ணுமில்ல... உனக்கு கொஞ்சம் சுக்குத் தண்ணி வெச்சுத்தரலாம்னு அடுப்பு பத்தவைக்கறேன். அவ்வளவுதான்.''

''எல்லாம் காலைல பாத்துக்கலாம். வந்து படு!''

''இந்த மழைக்கு சுக்குத் தண்ணிய சூடாக்குடிச்சா இதமா இருக்கும். நீ சும்மா இரு.''

- திலகம் பேச்சில் தாய்மை கொப்பளித்தது. நடுநடுவே இடியும் மின்னலும் விளையாட்டுக் காட்டி அந்த குச்சு வீட்டையே சில பல நொடிகள் ஃப்ளாஷில் காட்டிக் காட்டி அணைத்தன.

சண்முகத்துக்கும் அந்த இருண்ட அறையில் படுத்திருக்கப் பிடிக்கவில்லை. எழுந்து வாசல் கதவைத் திறந்து கொண்டு வெளியே வீதியைப் பார்த்தபடி உட்கார்ந்து கொண்டான்.

ஒரு சிகரெட் பற்ற வைத்துக் கொண்டால் சுகமாக இருக்கும்போல தோன்றியது. ஆனால் வீட்டுக்குள் அம்மா இருக்கிறாள். பார்த்தால் வருத்தப்படுவாள் என்பதால் அடக்கிக் கொண்டான்.

எதிரே தெருவே இருண்டு போய்க் கிடக்க நடுநடுவில் மின்னல் வெட்டும்போது மட்டும் அந்த வெளிச்சத்தில் தெருவிலுள்ள வீடுகளும், வீதியில் கணுக்கால் உயரத்திற்கு மழைத் தண்ணீர் ஓடிக் கொண்டிருப்பதும் தெரிந்தது.

அந்த சொல்ப நேர வெளிச்சத்தில் குப்பை மேட்டை ஒட்டிக் கிடந்த சிமெண்ட்டு குழாய் ஒன்றின் விளிம்பில் ஏதோ ஒன்று அதிகபட்சமாக மின்னியது.

முதலில் எதாவது ஜிகினாக் காகிதமாக இருக்கும் என்றுதான் நினைத்தான். ஆனால் மழை நின்று கரண்டும்

வந்துவிட தெரு விளக்கு வெளிச்சத்தில் அந்தக் குழாய் விளிம்பின்மேல் சங்கிலிபோல ஏதோ ஒன்று வீசி யெறியப்பட்டு சிக்கிக் கொண்டது போலத் தெரிந்தது.

மனதை 'ஜிகினா ஜிகினா' என்று சொல்லி சமாதானப்படுத்தியவன், அந்த சமாதானத்திற்கு அடங்காத மனதின் தூண்டுதலோடு எழுந்து அந்த குழாய் அருகே சென்று பார்த்தான்.

ஒரு அமெரிக்கன் டைமண்ட் மின்னும் நெக்லஸ் ஒன்று தான் அப்படிக் கிடந்தது!

'ஹக்!'

---

## 2

---

போலீஸ்காரர்கள் வந்து நோட்டம் போட்டபோது அந்த வீடே கந்தர் கோலமாகக் கிடந்தது. பீரோ திறந்து கிடக்க, டிரெஸ்ஸிங் டேபிள் கவிழ்ந்து கிடக்க, துணிமணியெல்லாம் மூலைக்கு ஒன்றாய் இருக்க சப்-இன்ஸ்பெக்டர் தன் விசாரணையை ஆரம்பித்தார்.

''இங்க ஹவுஸ் ஓனர் யாரு?''

''நான் தான் சார்...'' - ஒருவர் முன் வந்தார்.

''நான்தான்னா... பேரைச் சொல்லுங்க.''

''சார்... என்பேர் சிவராமகிருஷ்ணன்.''

''எப்ப இப்படி ஆச்சுன்னு உங்களுக்குத் தெரிய வந்தது?''

''நானும் என் மனைவி ரஞ்சனியும் எங்க சொந்த ஊருக்குப் போயிருந்தோம். போய்ட்டு திரும்பி வந்து கதவைத் திறந்து பார்த்தப்போ இப்படி எல்லாம் இறைஞ்சு கிடந்தது. திருட்டு நடந்ததை உடனே புரிஞ்சுக்கிட்டு ஸ்டேஷனுக்கு வந்து கம்ப்ளைண்ட் கொடுத்தேன்.''

''இங்க எதையும் யாரும் கலைச்சுடலியே...?''

''இல்ல சார். நான் யாரையும் தொடவே விடலை.''

''குட்... ஃபிங்கர் பிரிண்ட் இருக்கான்னு பாத்துட்றோம்.''

''அதால எதாவது பிரயோஜனம் உண்டா சார்...?''

''வாட் டூ யூ மின்?''

''இல்ல... திருட்டுன்னா ஃபிங்கர் பிரிண்ட் எடுக்கறதுங்கறது ரொம்ப யூஷுவலா இருக்கு. 1960கள்ல இருந்தே இதுதான் நிலை. இதுல மட்டும் வேற எந்த முன்னேற்றமும் ஏற்புடலையே சார்?''

- சிவராமகிருஷ்ணன் என்கிற அந்த மனிதர் கேட்ட விதத்தில் ஏகப்பட்ட ஏளனம். கூடவே அடப்பமாக ஒருவித வருத்தம். சப்-இன்ஸ்பெக்டர் அதை ரசித்த மாதிரி தான் தெரிந்தது.

''உங்க கேள்வியை நான் ரசிக்கறேன் மிஸ்டர் சிவ்ராமகிருஷ்ணன். ஒரு விஷயத்தை நீங்க புரிஞ்சுக்கணும். திருடர்களைப் பிடிக்கற விஷயத்துல நாங்க எவ்வளவு அட்வான்ஸா இருக்கோம்கறத வெளிய சொல்ல முடியாது. சொன்னா திருடங்களும் ரொம்ப அட்வான்ஸா திருட ஆரம்பிச்சுடுவாங்க. அவ்வளவுதான் இப்போதைக்கு என்னால சொல்ல முடியும்.''

-. சப்-இன்ஸ்பெக்டரின் பதிலைத் தொடர்ந்து சிவராமகிருஷ்ணன் என்னும் அந்த மனிதரின் மனைவியான ரஞ்சனி சப்-இன்ஸ்பெக்டர் முன்னால் வந்தாள். பார்க்க சற்று பேயறை பட்டவள் போல இருந்தாள்.

புகாரில் நூற்றி இருபது பவுன் நகை காணாமல் போயிருந்ததாகக் குறிப்பிட்டிருந்தது சப்-இன்ஸ்பெக்டர் ஞாபகத்தில் ஒரு கிள்ளு கிள்ளியது.

''டோன்ட் ஒர்ரி மேடம்... நிச்சயம் திருடனைப் பிடிச்சுடுவோம். உங்க நகைகள் திரும்பக்கிடைச்சுடும்.''

''எல்லா நகையும் கிடைக்கலேன்னாலும் பரவால்ல சார். ஒரு அமெரிக்கன் டயமண்ட்ஸ் பதிச்ச நெக்லஸ் மட்டும் கிடைச்சுட்டாக்கூட போதும்.''

''அவ்வளவு ஸ்பெசிஃபிக்கா சொல்றீங்களே. அந்

நெக்லஸ்ல மட்டும் என்ன அவ்வளவு ஸ்பெஷாலிட்டி.''

''அது ஒரு சுவாமிஜி எனக்கு பரிசா தந்த நெக்லஸ். அது வந்த பிறகுதான் இவர் வீடுவாங்கினார். கார் வாங்கினார். பிசினஸ் டெவலப் ஆச்சு.''

- சப்-இன்ஸ்பெக்டர் முகத்தில் அதைக் கேட்டு ஒரு கேலிச் சிரிப்பு - குட்டிப் பாம்பு ஒன்று துள்ளி ஓடுகிற மாதிரி ஓடியது.

''என்ன சார் கேலியா சிரிக்கிறீங்க. என் மனைவி சொல்றது ஒரு உண்மை சார். அது ரொம்ப ராசியான நெக்லஸ் சார்.''

''அப்படியே இருக்கட்டும் மிஸ்டர் சிவராமகிருஷ்ணன். எங்க வரைல எல்லா நகையுமே முக்கியமானது தான். இப்போதைக்கு அதுதான் என் பதில். பை த பை உங்களை ஒரு கேள்வி கேட்கலாமா?''

''அது மட்டும் எத்தனை பவுன்னு கேக்கறீங்களா?''

''இல்ல... ராசியான அந்த நெக்லஸால நீங்க முன்னுக்குவந்ததா சொல்றீங்களே. அது ராசியானதுன்னா திருட்டுப் போயிருக்கக் கூடாதே. அதுக்கு என்ன சொல்றீங்க?''

- சப்-இன்ஸ்பெக்டர் மடக்கிவிட்ட மாதிரி அவரைப் பார்த்தார்.

''வாஸ்தவம்தான் இன்ஸ்பெக்டர். ஆனா அந்த நெக்லஸைக் கொடுக்கும்போதே அந்த மகான் சொல்லித் தான் கொடுத்தார் - 'இதை கவனமா வெச்சுக்கணும். நீங்க தப்பு பண்ணினா உங்களை விட்டு இதுபோயிடும்'னு அவர் சொன்னது அப்ப புரியல. இப்பபுரியது!''

''அப்படி என்ன செய்யக்கூடாத தப்பை பண்ணினீங்க?''

''அது செய்யக்கூடாத தப்பு இல்லை. எல்லாரும் வழக்கமா செய்யற தப்பு தான்.''

''என்னன்னு தெரிஞ்சுக்கலாமா?''

''வேண்டாம் சப்-இன்ஸ்பெக்டர் சார். அதைச் சொல்லவே எனக்கு வெட்கமா இருக்கு. ரொம்ப சங்கடமாவும் இருக்கு.''

''அதுக்காக உங்களை நான் பனிஷ் பண்ணிடுவேன்னு பயப்பட்றீங்களா?''

''நிச்சயமா இல்லை. சரி வெட்கத்தைவிட்டு சொல்லிட்றேனே. என் மனைவி இருக்கும்போது நான் என்கிட்ட ஸ்டெனோவா வேலைக்கு சேர்ந்த பவித்ராங்கற பெண்கிட்ட மயங்கிட்டேன். அவளுக்காக என் மனைவிக்குத் தெரியாம நிறைய நகைகள் வாங்கிக் கொடுத்தேன்...''

- சிவராமகிருஷ்ணன் முழுவதுமாய் முடிக்காமல் மென்று துப்ப சப்-இன்ஸ்பெக்டர் கரம் போதும் என்கிற மாதிரி அவர் தோளைப் பற்றியது. அவரிடமும் இறுக்கமான மௌனம்.

''இட்ஸ் ஓ.கே... இப்ப அந்த தப்பை உணர்றீங்களா...?''

''நிச்சயமா...''

''குட்... இனியாவது உறுதியா இருங்க. உங்க ராசியான நெக்லஸ் உங்களுக்கு நிச்சயமா திரும்ப வரும்.''

''இன்ஃபாக்ட் அது யார்கிட்ட இருக்கோ அவங்களுக்கு யோகம் தாங்கறது என்னோட நம்பிக்கை சப்-இன்ஸ்பெக்டர் சார்.''

''அப்ப திருடினவனுக்கு யோகம்னு சொல்லுங்க.''

''அதுல எனக்கு சந்தேகமே இல்லை!''

# 3

அந்த நெக்லஸை -

உரசிப்பார்த்த ஆசாரி தன் பான்பராக் வாயை பாதாள பைரவி குகை வாயைப் போல பெரிதாகத் திறந்தார்.

''சொக்கத் தங்கம் தம்பி இது. இருபத்தி நாலு கேரட். எங்க கிடைச்சிச்சு?'' - கேட்ட விதமே சரியில்லை.

''ஆமா... கீழே கிடைக்க இது என்ன கல்லா, மண்ணா...? காசுக்கு வாங்கினது ஆசாரி. தெளிவான சரக்கு தானான்னு தெரிஞ்சுக்கதான் உங்கக்கிட்ட கொண்டுகிட்டு வந்தேன்.''

- சண்முகம் சமாளித்தான்.

''என்கிட்டையே காது குத்தறியே நைனா. உன்னை மாதிரி நான் எவ்வளவு பேரைப் பாத்திருப்பேன்?''

''அப்ப இது எனக்கு கீழே கிடைச்சுச்சுங்கிறியா?''

''எந்த மடையனாவது இதைக் கீழே போடுவானா...? நான் அப்படி சொல்வேனா?''

''பின்ன?''

''எங்க கை வெச்சே...?''

''என்னது? ஓகை வெச்சேனா?... கொண்டாரய்யா முதல்ல நெக்லஸை. கைவெச்சேனாமுல்ல கை. காசு கொடுத்து வாங்கினதுன்னு சொல்றேன்.''

''எழுதி வேணா த்ரேன். காசுக்கு இப்படி ஒரு நெக்லஸை வாங்கவே முடியாது!''

''ஏன் வாங்க முடியாது? ஏன்யா வாங்க முடியாது?''

''அப்படிக் கேளு சொல்றேன். எந்த நகை ஆசாரியும் இப்படி 24 காரட்டுல பசும் தங்கத்துல செம்பு கலக்காம நெக்லஸ் செய்யமாட்டாங்க. அதுமட்டுமில்ல... இது அமெரிக்கன் டைமண்டுல்ல. அசல் வைரக் கல்லுங்க.''

''என்னது... அசல் வைரமா?''

''ஆமாம். அமெரிக்கன் டைமண்ட் மாதிரி தெரியற அசல் வைரம்.''

''நிஜமாவா...?''

''சத்தியமாவும் சொல்றேன். மதிப்பு எவ்வளவு தெரியுமா?''

''எவ்வளவு?''

''நீ காசு கொடுத்து வாங்கினதுன்னு சொன்னியே. இப்ப என்னைக் கேட்கறே?''

''நீ மதிப்பைச் சொல்லு. அப்புறம் நான் எவ்வளவுக்கு வாங்கினதுன்னு சொல்றேன்.''

''பாத்தியா... பாத்தியா... நீ டெல்லிக்கே அல்வா

கொடுக்கிறியே தம்பி. நான் சொன்ன பிறகு அதுல கொஞ்சம் கூட்டியோ குறைச்சோ சொல்றதா பெரிசு?''

''ஆசாரி... உசுரை வாங்காதய்யா. மதிப்பைச் சொல்லுய்யா.''

''சொல்லிடவா...?''

''சொல்லுன்னு தானே சொல்றேன்.''

''கிட்டத்தட்ட பத்து லட்ச ரூபா போகும்.''

''பத்து லட்சமா?'' - சண்முகத்துக்கு மயக்கமே வந்துவிட்டது.

''இப்பவே நான் அஞ்சு லட்சுத்துக்கு எடுத்துக்கறேன். உண்மையைச் சொல்லு. இது திருட்டுச் சரக்குதானே?''

''சத்தியமா இல்லை ஆசாரி. உண்மையைச் சொல்லிட்றேன். இது குப்பைத் தொட்டில கிடைச்சது.''

- சண்முகம் சொல்லி முடிக்க ஆசாரி இடி இடி என்று சிரிக்க ஆரம்பிக்க சரியாக இருந்தது.

''ஆசாரி... என்னை நம்புய்யா. நான் சொல்றது தான் உண்மை.''

''பத்து லட்ச ரூபா வைர நெக்லஸை எவனாவது குப்பைத் தொட்டியில போடுவானா... காதுகுத்தறியே நைனா!''

''என் அம்மா மேல சத்தியமா சொல்றேன். இது குப்பைத் தொட்டியிலதான் கிடைச்சது. நம்புய்யா.''

- சண்முகம் அந்த உண்மைனய சாதித்தான்.

ஆசாரி அதன்பின் எதுவும் பேசவில்லை. அவனையே வெறித்துப் பார்த்தான்.

''எதுக்குய்யா இப்படிப் பாக்கறே?''

''ஒண்ணுமில்ல... சரி இப்ப இதை என்ன பண்ணப் போறே?''

''போலீஸ்ல கொடுத்துடப் போறேன்...''

''இதை நான் நம்பவா?''

''சத்யமாய்யா... குப்பைத் தொட்டியில கிடைச்சது தங்கமால்லாம் இருக்காது. நாடகக்காரங்க போட்டுக்கற சரக்கா இருக்கும்னு தான் நினைச்சேன். இருந்தாலும் ஒரு சந்தேகம். அதான் உன்கிட்ட காட்ட வந்தேன். ஆனா இது

அநியாயமா தங்கமா இருக்குது! கல்லுங்கல்லாம் வேற வைரங்கறே... பத்து லட்ச ரூவா போவுமங்கறே... பாவம் தொலைச்ச பார்ட்டி என்ன பாடுபட்டுகிட்டிருக் காங்களோ தெரியல?''

- கழிவிரக்கமாக சண்முகம் பேசப்பேச ஆசாரி முகத்தில் தீர்க்கம் கூடிக் கொண்டே போனது.

''சரி கொண்டா... முதல்ல போய் போலீஸ்ல கொடுக்கறேன்.''

- கையை நீட்டினான் சண்முகம்.

''கொடுத்துட்டு கம்பி எண்ணப் போறியா?'' - ஆசாரி நறுக்கென்று கேட்டான்.

''நான் எதுக்கு கம்பி எண்றேன்?''

''கம்பி தான் எண்ணுவே. ஆமா நீ எந்த ஏரியான்னு சொன்னே?''

''திலகர் நகர்!''

''அப்படியா... இந்த பேப்பரைப்பார்.''

- ஆசாரி பக்கத்திலிருந்த தினசரியை எடுத்துப் போட்டான். அதில் 'திலகர் நகரில் திருட்டு!' என்று கொட்டை எழுத்தில் ஒரு செய்தி. பக்கத்திலேயே சிவராமகிருஷ்ணன் படம் போடப்பட்டிருந்தது. கீழே விளக்கம்.

**'திலகர் நகரில் வசிக்கும் சிவராமகிருஷ்ணன் என்பவரின் வீட்டில் பூட்டை உடைத்து நகை கொள்ளை. வெளியூர் சென்று திரும்பிய நிலையில் வீட்டில் கொள்ளை அடிக்கப்பட்டது தெரிந்து சிவராமகிருஷ்ணன் போலீஸில் புகார் செய்தார்.**

**திருட்டுப்போன பொருட்களின் மதிப்பு பல லட்ச ரூபாய் இருக்கும் என்று தெரிகிறது. அதில் பாபாவைப் போன்ற மகான் ஒருவர் ஆசீர்வாதம் செய்து தந்த ஒரு வைர நெக்லசும் அடக்கம். அந்த நெக்லஸ் வந்த பிறகே தன் குடும்பத்தில் மிகப் பெரிய முன்னேற் றங்கள் எல்லாம் ஏற்பட்டதாக திரு. சிவராமகிருஷ் ணன் குறிப்பிட்டார். கொள்ளைக் கூட்டத்தை போலீஸார் வலை விரித்து தேடி வருகிறார்கள்!'**

செய்தியைப் படித்த சண்முகத்துக்கு தலையைச் சுற்றியது.

''என்னப்பா... தலை சுத்துதா?''

''ஆமாம் ஆசாரி... அப்ப இந்த வைர நெக்லஸ் இந்த சிவராம கிருஷ்ணன்தா இருக்குமோ?''

''சந்தேகமே இல்லை. அந்தாளுது தான்.''

''ரொம்ப சௌகர்யமா போச்சு. நான் நேரா பார்த்து இதைக் கொடுத்துட்றேன்.''

''கொடுத்துட்டு அந்த ஆள் போலீஸ்ல பிடிச்சு கொடுத்தா கம்பி எண்ணுவியா?''

''நான் எதுக்கு கம்பி எண்றேன்?''

''கம்பி எண்ணாம...? திருட்டுப் போனது இது ஒரு நகை மட்டும் இல்லை தெரிஞ்சுக்கோ. மத்த நகை எல்லாம் எங்கேன்னு கேப்பாங்க. என்ன பதில் சொல்வே?''

''என் கைல இதானே கிடைச்சிச்சு... அதை சொல்லிட்டுப் போறேன்.''

''இவ்வளவு வெள்ளந்தியா இருக்கியே நீ. நீ சொன்னா... அவங்க நம்ப வேண்டாமா?''

''ஏன் நம்ப மாட்டாங்க...?''

''சரி... போ... போய் குப்பைத் தொட்டியில இந்த நெக்லஸ் கிடைச்சிச்சுன்னு சொல்லிக்கொடு. நம்பறாங்களான்னு பாப்போம்.''

''ஏன் ஆசாரி நம்பமாட்டாங்க...?''

''முட்டாளா இருக்கியே... வீடு பூந்து பீரோவுல இருக்கறத திருடினவன் குப்பைத் தொட்டியில இது ஒண்ணை மட்டும் போட்டுட்டு போவானான்னு கேப்பாங்க... என்ன சொல்வே?''

''எனக்கு அதெல்லாம் தெரியாது. எனக்கு கிடைச்சத ஒப்படைக்க வந்திருக்கேன். அவ்வளவுதான்!''

''விசாரணைங்கற பேர்ல உள்ள வெச்சு வெளுப்பாங்க. பரவால்லியா?''

''யோவ் என்னய்யா... என்னென்னவோ சொல்றே?''

''உள்ளதைச் சொல்றேன். உனக்கு நம்ம போலீஸைப்

பத்தி தெரியாது. இதுதான் சாக்குன்னு உன்மேல ஊர்ப்பட்ட திருட்டுக் குத்தத்தை சுமத்தி மாஜிஸ்த்ரேட் முன்னாடி இழுத்துப் போய் நிறுத்திடுவாங்க.

ஏன்னா அசல் திருடன் இந்நேரம் இந்த ஜில்லாவை விட்டே ஓடியிருப்பான். இவங்களுக்கோ கேஸை முடிக்கணும். வேற வழி?''

''ஐயோ... பயமுறுத்தறியேய்யா!''

''யதார்த்தத்தை சொல்றேன். கேட்டா கேளு - இல்ல விடு!''

''சரி என்ன பண்ணலாம்கறே?''

''பயப்படாதே. இது சாமியார் கொடுத்த ராசியான நெக்லஸாம். ஆகையால இதை பத்ரமா வெச்சிரு. ராசியா இருந்தா உன்னை இது தூக்கிக்கிட்டு மேல போகும். இல்லேன்னா அந்த திருடங்க மாட்ற வரை காத்திருந்து அப்பால இதை காதும் காதும் வெச்சமாதிரி ஒரு கொரியர் தபால்ல அனுப்பிடு.

அதுக்கும் மனசில்லேன்னா மனசாட்சியைதூக்கிதூரப் போட்டுட்டு வித்து காசாக்கற வழியைப்பார்.''

- ஆசாரி தனக்கு சரி என்று பட்டதைத்தான் சொன்னான். சண்முகமும் அதை ஒப்புக் கொண்ட மாதிரி அந்த நெக்லஸை எடுத்து ஒரு துணியில் கட்டி பாக்கெட்டில் போட்டுக் கொண்டான். புறப்படக் காலெடுத்தான்.

''ஒரு நிமிஷம்!''

- திரும்பினான்.

''ராசி ஒர்க் அவுட் ஆனா எனக்கும் பங்கு தரணும். பத்து லட்ச ரூவா சரக்கை நீ வேணா திருப்பித்தர விரும்பலாம். ஆனா நான் அந்த அளவு நல்லவன் கிடையாது. என்வரைல, லட்சுமி தேடி வந்தா அவளை பூட்டி வைச்சுக்கத்தான் பார்ப்பேன்!''

''அப்ப ராசின்னு ஒண்ணு இருக்குதா?''

''உனக்கு நம்பிக்கை இல்லையா?''

''அதெல்லாம் கப்ஸா. எனக்கு நம்பிக்கை இல்லை!''

''பாப்போமே...''

''பாப்போம்...''

''இங்க இருந்து போன பின்னே எனக்கு அல்வா கொடுத்துடாதே. ராசியில பங்கு தரணும். இல்லே நெக்லஸ்ல பாதிய தந்துடணும். இல்லே போலீசுக்கு போட்டு உட்டுடுவேன்.''

''ஆமா... நீ நல்லவனா கெட்டவனா?''

''இந்தியக் குடிமகன் - அதாவது இரண்டும் கெட்டான்!''

- சண்முகம் அந்த பதில்ல ரசித்துச் சிரித்தான். கட்டை விரலை உயர்த்தி சம்மதம் என்கிற மாதிரி காட்டிவிட்டு ''நான் ரஜினி மாதிரி நல்லவனுக்கு நல்லவன்'' என்றபடியே அங்கிருந்து நழுவினான்!

---

# 4

---

ரஞ்சனி ஏக்கவலையில் இருந்தாள். வரிசையாக வந்து துக்கம் விசாரித்து விட்டுப் போய்க் கொண்டிருந்தார்கள். திருட்டு கொடுத்ததைவிட பெரிய துக்கமாக அது இருந்தது. அடுத்து யாராவது வருவதற்குள் போய் கதவைத் தாழிட்டு விட்டுவந்தாள்.

சோபாவில் விழுந்து டி.வி.யை தட்டிவிட்டு கவனத்தை அதில் கொண்டு செல்லப் பார்த்தாள். இயலாதபடி பக்கத்தில் இருந்த பீரோ, நகைகளை ஞாபகம் மூட்டியது. அவள் அப்பா அவள் கல்யாணத்தின்போது போட்ட கொடிச்சங்கிலி, ரெட்டை வடம் சங்கிலி, நெல் மோதிரம், கங்கண வளையல் என்று வரிசையாக அவை ஞாபகம் வந்தன.

அங்கும் இங்கும் கடன் வாங்கி பார்த்துப் பார்த்து செய்துபோட்டது!

- ஒரு நாளில் போய்விட்டது.

- அழுகை கண்களில் பொழிந்தது. எதிரில் சுவரில்

இன்று மிகப் பிரபலமாக விளங்கும் அந்த மகானின் புகைப் படம். கைகளை உயர்த்தி ஆசீர்வாதம் செய்தபடி இருந்தார் மகான் அருணாசலமூர்த்தி.

தும்பைப் பூ போல் தாடி, மீசை. தலையிலும் கொக்குச் சிறகாய் முடிக்கற்றைகள். கண்களில் ஒரு வித பிரகாசம். தாகூரையும், அரவிந்தரையும் கலந்து செய்த மாதிரி ஒருமுகம்.

போலி மகான்களின் முகத்தில் இப்படி ஒரு ஒளியைப் பார்க்க முடியாது. கண்களே காட்டிக் கொடுத்து விடும். இவர் அப்பழுக்கில்லாத தவசி என்பது பார்த்த மாத்திரத்தில் தெரிந்தது. சினேகிதி ஒருத்தி மூலமாகத் தான் அவர்மேல் பக்தி வந்தது.

மனதில் நினைப்பதை அப்படியே சொல்லக் கூடியவராம்! ரஞ்சனி அவரை தரிசித்தபோது கூட அவள் மனதில் இருந்ததை அப்படியே சொன்னார்.

ரஞ்சனிக்குள் நினைவுகள் அவரை நோக்கிச் செல்கின்றன. நடந்து முடிந்த அந்த சம்பவம் ஒரு திரைப்படம் போல ஓட ஆரம்பிக்கிறது.

''சாமி... எனக்கு கொஞ்சம் கூட நிம்மதி இல்லை!''

''தெரியும் குழந்தை... எல்லாம் உன் பூர்வஜென்ம கர்மம்.''

''எனக்குத் தெரிஞ்சு நான் எந்த பாவமும் செய்ததில்லை சாமி!''

''அதனால்தான் நீ இப்ப என்னை சந்திக்க முடிஞ்சது குழந்தை.''

''எனக்கு விமோசனம் வேணும். நாலு பக்கமும் கடன்.''

''கவலைப்படாதே. அது தீரும் நேரம் வந்துடுச்சு.''

''எப்ப தீரும்...? எப்படித் தீரும்?''

– அவள் கேட்க, அவர் ஆகாயத்தில் கைகளை உயர்த்தி எதையோ கேட்பது போல் கேட்டு கீழிறக்கியபோது அந்தக் கையில் நெக்லஸ் இருந்தது.

''இந்தா... இதை பத்ரமா வெச்சுக்கோ. இது அந்த

மகாலக்ஷ்மியோடது.''

- ரஞ்சனி அதைப் பார்த்தும் கேட்டும் சிலிர்த்துப் போனாள்.

''இது இருக்கற இடத்துல செல்வம் சேரும். தொட்டதெல்லாம் பொன்னாகும்!''

''ரொம்ப சந்தோஷம் சாமி...''

''செல்வம் சேரும் போது கவனமா இரு. குறிப்பா உன் கணவர் விஷயத்துல, ரொம்ப கவனமா இரு.''

''கணவர்விஷயத்துலையா...?''

''ஆமாம். அவருக்கு இன்னும் நல்ல காலம் வரலை. உன் நல்ல காலம் அவர் கெட்ட காலத்துக்கு பதிலா அமைஞ்சு அவரை மாத்தணும். அது நீ தர்மத்தோட நடந்துக்கறதுல தான் இருக்கு.''

- அவர் அன்று சொல்லியதுதான் எவ்வளவு பெரிய உண்மை. ஆனால் எதனால் அப்படிச் சொன்னார் என்று அப்போது கேட்டுக் கொள்ளவேயில்லை.

பெரியவர்கள்காரணமில்லாமல் சொல்லமாட்டார்கள் என்று எச்சரிக்கையாக இருக்கவும் முடியவில்லை. காசு சேரச் சேர கர்வம் சேர்ந்தது.

தினமும் பூஜை புனஸ்காரம் என்று கடவுளை துதி பாடிவிட்டால் அவர் செய்யும் தப்புக்களை கண்டு கொள்ளமாட்டார் என்று புத்தி நினைத்து விட்டது. [illegible] வட்டிக்கு கடன் வாங்கியவள் பத்து வட்டிக்கு கடன் கொடுத்தாள்!

வட்டி வாங்குவது பாவம் என்று புத்திக்கு புலப்படவே இல்லை. 'அப்படியானால் இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு 'வங்கியுமே' பாவம் தான் செய்கின்றன' என்று ஒரு நியாயம் உள்ளே இருந்து கொண்டு செய்வதை எல்லாம் ஊக்கப்படுத்தியது. அவ்வப்போது சுமங்கலி பூஜை, ஏழைகளுக்கு அன்னதானம் என்று செய்ததெல்லாம்கூட ஒருவித லஞ்சம் மாதிரிதான் என்பது புரியாமலே போய்விட்டது.

ஒருபக்கம் ரஞ்சனி லட்சங்களில் புரள மறுபக்கம் கணவன் சிவராம கிருஷ்ணன் சின்னவீடு பார்த்து அங்கே

ஒருத்தி மடியில் புரள ஆரம்பித்துவிட்டார்.

ஒருநாள் மகான் அருணாசலமூர்த்தி தந்த வைர நெக்லஸையே அவள் கழுத்தில் போட்டு அழகும் பார்த்தார். ரஞ்சனி எதற்கோ பீரோவை திறந்தாள். நெக்லஸ் இல்லாததைப் பார்த்து அதிர்ந்து போனாள்.

எங்கே என்று கணவரிடம் கேட்க சிவராம கிருஷ்ணனும் பேங்க் லாக்கரில் இருப்பதாக பொய்யைச் சொல்லி சமாளித்தார்.

எந்த பேங்க் என்று நெருக்கிப் பிடிக்கவும் உண்மையைச் சொல்லிவிட்டார்.

அந்த க்ஷணத்தில் ரஞ்சனிக்கு வானமே இடிந்து தலைமேல் விழுந்து விட்டது போலாகிவிட்டது. அப்பொழுதுதான் மகான் அருணாசலமூர்த்தி சொன்னதே பொட்டில் உறைத்தது. 'போனது போகட்டும். இனியாவது அவர் சொன்ன மாதிரி உண்மையாகவும், தர்மமாகவும் இருந்துவிடலாம்' என்று முடிவுக்கு வந்தும் பலனில்லை.

திருடன் புகுந்து விட்டான்!

இனி என்னாகும்?

ஒரே வழி தான் அவளுக்குத் தோன்றியது.

திரும்பவும் அந்த மகானின் காலில் போய் விழுவதுதான் அது!

---

# 5

---

வீடு திரும்பிய சண்முகத்தை அம்மாவின் இருமல் சப்தம் திருப்பியது. அவள் எதிரில் போய் நின்றான்.

''எங்கடா போய்ட்டுவரே...? கடை திறக்கலியா இன்னிக்கு?''

''மனசே சரியில்லம்மா...''

''ஏன் ராசா... திடீர்னு மனசு சரியில்லேன்னா என்ன அர்த்தம்?''

- வியர்த்துக் களைத்திருக்கும் முகத்தோடு அவள் கேட்டாள். சொல்லிவிடலாமா? - அவனுக்குள் கேள்வி. ஆனால் அவளோ அடுத்த நொடி ஊர்க்காசு நமக்கு எதுக்கு என்று பிலாக்கணம் பாட ஆரம்பித்து விடுவாள். இவளிடம் சொல்லாமல் இருப்பதுதான் நல்லது என்று தோன்றியது.

''ஒண்ணுமில்லம்மா... வாழ்க்கை பூரா இப்படி குச்சி வீட்லையே ஓடிடுமோன்னு நினைச்சேன். அதான்!''

''இவ்வளவுதானா... நேரம் வந்தா தன்னால விடிஞ்சிடும் ராசா.''

''வந்தாதானே... அதுதான் வரவே மாட்டேங்குதே?''

''வரும். இப்ப நமக்கு என்ன குறை?''

- திலகம் அவனை ஆச்சரியப்படுத்தினாள். இரவெல்லாம் ஒழுகும் ஒரு வீட்டில் கொசுக்கடிக்கு நடுவில் படுத்துக்கிடந்தவள்தான் கேட்கிறாள் - நமக்கு என்ன குறை என்று...! அவளிடம் இருப்பது பரிபூரணமான மனதா...? அதனால்தான் அவள் இப்படி கேட்கிறாளா?

''அம்மா... எப்படிம்மா உன்னால இந்த நிலையிலயும் இப்படி பேசமுடியுது?''

''இந்த நிலைன்னா...? நான் என்ன சாகக்கிடக்கறேனா இல்லை உனக்குதான் கை கால் இல்லையா... லட்டு மாதிரி மகன். உடம்புல உழைக்கத் தெம்பு. என்னடா குறை?''

அவனுக்கு நெகிழ்வாக இருந்தது. 'யாருக்காவது இப்படி ஒரு அம்மா கிடைப்பாளா?'

பெருமிதமாக இருந்தது.

நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு உள்ளே சென்றான். அறை மூலையில் பழைய பானைகளை வரிசையாக அடுக்கி வைத்திருந்தாள். எப்பொழுதாவதுதான் பயன் படுத்துவாள்.

அதில் அடிப்பானையில் நெக்லஸை அவளுக்குத்

தெரியாமல் வைத்தான்.

வைக்கும்போது ஆசாரி ராசி பற்றி சொன்னது நினைவுக்கு வந்தது. கூடவே மிகமிகச் சன்னமாக சிரிப்பும் வந்தது.

சிரித்தபடி வெளியே வந்தான்.

அலுமினியப் பாத்திரத்தில் விறகு அடுப்பில் வெந்நீர் வைத்துத் தந்தாள்.

குளித்தான்!

சம்படத்து விபூதியை எடுத்து நெற்றியில் ஒரு இழு இழுத்தான். முகமே மாறிப் போனது.

போய் கடையைத் திறக்க தோதாக கடை சாவியை தேடி எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

எதிரில் வக்கீல் வந்து கொண்டிருந்தார்.

அவரைப் பார்க்கவும்தான் வழக்கே ஞாபகம் வந்தது.

அவன் அப்பாவழி பூர்வீக சொத்து வழக்கு.

12 வருஷமாக நடந்து கொண்டிருக்கிறது.

எதிரிகளிடமே போய் சமாதானமாகிவிடலாமா என்கிற அளவுக்கு இழுத்தடிக்கும் வழக்கு.

வாய்தா... வாய்தா... என்று வாய்தாவிலேயே பல வருஷம். அப்புறம் விசாரணை விசாரணை என்று சில வருஷம்.

'எல்லாஎழவும்தான்முடிந்தவிட்டதே? இப்பொழுது எதற்கு வருகிறார் வக்கீல்?'

வக்கீல் அவனை நெருங்கி சிரித்தார்.

இப்படிச் சிரிப்பது இதுதான் முதல் முறை. சரியான தேங்காய் மூடி வக்கீல். பக்கத்துத் தெருவில்தான் குடி இருக்கிறார். ஒரு மொபட் வாங்கிக் கொள்ளக்கூட வக்கில்லை.

டவுன் பஸ்ஸில் தான் கோர்ட்டுக்கே போகிறவர்.

'இப்பொழுது வந்து சிரிக்கிறாரே...?

ஐம்பது, நூறு என்று ராவப் போகிறாரா...?'

''சார்... என்ன சார் விஷயம்... எங்களுக்கு கேஸே வேண்டாம் சார். எங்கப்பா சொத்தும் வேண்டாம் சார். அந்த சொத்தை எங்க சின்னம்மா பசங்களே

எடுத்துக்கட்டும் சார். தயவு செய்து நீங்க ஐம்பது நூறு கேக்காதீங்க. இங்க குளிருக்கு ஒரு நல்ல போர்வை வாங்க முடியல சார்.''

- சிரித்தவரைப் பார்த்து பொரிந்து தள்ளினான். அவர் தோளில் கை போட்டார்.

''பதட்டப்படாதே... கேஸ்ல ஜெயிச்சாச்சு. ஆனா ஒரு சின்ன இடைஞ்சல்.''

- ஆச்சரிய அதிர்ச்சியோடு ஒரு கொக்கி போட்டார் வக்கீல். இலகுமும் ஓடி வந்தான்.

''என்ன இடைஞ்சல்?''

''உங்கப்பா சொத்துல இந்த தெருவுலயே இருக்குதே அந்த பாழடைஞ்ச வீடு. அதுதான் உங்களுக்கு. டவுன்ல இருக்கற ஃப்ளாட் உங்க சின்னம்மாவுக்குன்னு தீர்ப்பாயிடிச்சு.''

''என்னது... இந்த பாழடைஞ்ச பூத் பங்களா எங்களுக்கு; நல்ல வீடு அவங்களுக்காமா?''

- எகிறினான் சண்முகம்.

''நீதிபதி தீர்ப்பு சொல்லிட்டார். இதுவும் நல்லதுக்குதான். அந்த ஃப்ளாட் எட்டு நூறு சதுர அடிதான். ஆனா இந்த பாழடைஞ்ச வீடு இரண்டாயிரம் சதுர அடி. இடிச்சுட்டு இடத்தை மட்டும் வித்தாலே இரண்டு லட்சம் போகும்.''

- வக்கீல் சொன்ன பிறகுதான் உரைத்தது.

இரண்டு லட்சம் போகும் ஒரு சொத்து 12 வருஷம் கழித்து வரப்பட்டிருக்கிறது.

நினைத்துப் பார்க்கவே நெஞ்சுக்கு இதமாக இருந்தது.

அட!

நெக்லஸ் வேலையைக் காட்ட ஆரம்பித்து விட்டதா...?

இதுதான் ராசியா?

★ உலோகங்களில் மிக உயர்ந்ததாகக் கருதப்படுவது எது? புளூடோனியம்.

★ தென்னாட்டு காசி என்று எந்த நகரத்தை அழைக்கிறார்கள்? காஞ்சி.

# 6

ஆஸ்ரமத்தில் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. ஹைடெக் யுகத்தில் செல்ஃபோனில் பேசிக்கொண்டு எப்படி ஆன்மீகத்திலும் ஆழமாய் விழுந்து கிடக்கிறார்கள் என்பது புரியாத புதிராக இருந்தது.

ஒரு சில பத்திரிகையாளர்களும் வந்திருந்தார்கள்.

மகான் அருணாசலமூர்த்தியின் தீட்சை கிடைப்பதே அபூர்வம் என்று சொல்லப்பட்டிருந்ததால் அவர் பார்வையில்பட்டு அவரோடு பேசுவதற்காக அலைமோதிக் கொண்டிருந்தார்கள்.

கூட்டத்தில் ரஞ்சனியும் இருந்தாள்.

போன முறை வந்தபோது மகானே அவளிடம் வந்து பேசினார்.

இந்த முறை அப்படி நடக்குமா...? அவருக்கு ஞாபகம் இருக்குமா?

அவள் கேள்விகளுக்குள் அல்லாடியபடி பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவரும் மைய மண்டபத்திற்கு தரிசனம் தர வந்துவிட்டார். கூட்டம் கோஷித்தது.

'ஜெயஜெய அருணாசலா...

ஹர ஹர அருணாசலா...'

அவர் கைகளை உயர்த்தி ஆசீர்வாதம் செய்துவிட்டு, பேச ஆரம்பித்தார்.

''என் அன்பான மித்ரர்களே!'' என்று அவருக்கே உரிய பாணியில் ஆரம்பித்தவர் நேரம் பற்றி பேச ஆரம்பித்தார்.

'நேரம் என்றால் என்ன?

இப்பொழுது நம்மிடையே விநாடி விநாடியாகக் கழிந்து கொண்டிருக்கிறதே அதுதானே...?

இது எத்தனை மதிப்பு மிக்கது – சக்திமிக்கது என்று உங்களுக்குத் தெரியுமா?'

- கேள்வி கேட்டுவிட்டு கூட்டத்தைப் பார்த்தார்.

பலரும் சொல்லும் 'காலம் பொன் போன்றது. கடமை கண் போன்றது' என்றுதான் இவரும் சொல்லப் போவதாகத்தான் பலர் நினைத்தார்கள். ஆனால் மகானின் அணுகு முறை வேறாக இருந்தது.

'இந்த நேரத்தின் உள்ளே காலை, மதியம், மாலை, இரவு என்று பொழுதுகளை நாம் வகுத்து வைத்திருக்கிறோம். அதையும் கூட 24 மணி நேரம் என்கிற கட்டுக்குள் அடக்கி, நமக்கு வசதியாக பிரித்துக் கொண்டிருக்கிறோம். இந்த 24 மணி நேரம் என்பதனுள் என்னவெல்லாம் இருக்கிறது தெரியுமா?'

- மீண்டும் இடைவெளி... கூட்டத்திடமும் கூர்மையான கவனம்.

'இந்த 24 மணி நேரத்திற்குள் தான் நல்லது, கெட்டது என்று நம்மால் பாகுபடுத்தப்பட்ட திதிகள், நாழிகைகள் கண்டங்கள், நட்சத்திர வீச்சுக்கள், அதையொட்டிய கிரகத்தின் ஆதிக்கக்கதிர்கள், அந்தக் கதிர்களால் உருவான அதிர்வுகள் என்று எல்லாம் உள்ளன. இவை நேற்றும் இருந்தது. இன்றும் இருக்கிறது. நாளையும் இருக்கும். நாம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் 'இது இருக்கும். நாம் உணர்ந்தாலும் உணராவிட்டாலும் இது இருக்கிறது. இதை நாம் உணர்ந்து கொண்டால் அதற்கேற்ப விளைவுகளை நாம் அனுபவிக்கலாம். எப்படித் தெரியுமா?'

- மகானின் அருளுரை தொடர்ந்து கொண்டிருக்க ரங்கநாதனுக்கு பொறுமை அற்றுப் போனது. 'இதை எல்லாம்

கேட்பதற்கு நான் வரவில்லை. அந்த மனநிலையும் எனக்கில்லை' என்று எழுந்து கத்திவிடலாமா என்று கூட தோன்றியது.

ஆனால் க்ஷணத்தில் அது மாறும் விதமாய் மகானின் பேச்சு திசை மாறியது.

'இங்கே இருக்கும் பலரில் சிலர் என் பேச்சைக் கேட்டு பொறுமை இழந்திருக்கலாம். 'நாங்கள் இப்படி பேச்சைக் கேட்க வரவில்லை. உங்கள் சக்தியால் எங்களுக்கு உதவுங்கள்' என்று கேட்க வந்திருப்பதாக நினைக்கிறேன். சொல்லப் போனால் அவர்களுக்காகவே இங்கே நான் பேசிக் கொண்டிருக்கிறேன்!'

- ரஞ்சனி அதிர்ந்தாள். கூர்மையாக அவர் சொல்வதை கவனித்தாள்.

'அன்பு மித்திரர்களே! உங்களுக்கு ஒன்றை உறுதியாக கூறிக் கொள்கிறேன்.

கால நேரங்களை மதியுங்கள். அதற்கேற்ப நடந்து கொள்ளுங்கள். நீங்கள் நேரத்தை எவ்வளவு மதிக்கிறீர்களோ அவ்வளவு, நேரம் உங்களை மதிக்கும்.

ஒரு விநாடி கூட தாமதம் செய்யாமல் ஒவ்வொரு விஷயத்திலும் செயல்படுபவர்களை காலமும் தாமதமின்றி ஆதரிக்கிறது. நன்றாக கவனித்துப் பாருங்கள். மிகப் பெரிய வெற்றியாளர்களாக இருப்பவர்கள் ஒவ்வொரு விநாடியையும் பயன் படுத்துகின்றவர்களாக இருப்பார்கள். ஒன்பது மணிக்கு ஒரு இடத்துக்கு வருவதாக சொல்லியிருந்தால் ஒன்பது மணிக்கு அந்த இடத்தில் இருப்பார்கள். ஒரு நிமிடம் முந்தியோ, பிந்தியோ கூட வரமாட்டார்கள். நன்றாக கூர்ந்து கவனித்துப் பாருங்க்ள். நான் சொல்வது உங்களுக்குப் புரியும்.'

அவர் பேச்சில் ரஞ்சனி கரைந்திருந்தாள். தன்

வாழ்க்கைச் சிக்கல்களுக்கும், இந்த நேரப் பயன் பாட்டிற்கும் என்ன தொடர்பு என்று ஒரு கிளைக் கேள்வி அவளுக்குள் ஓட ஆரம்பித்திருந்தது. மகான் அருணாசல மூர்த்தி தொடர்ந்து கொண்டிருந்தார்.

'அன்பான மித்திரர்களே...

உங்களுக்கு நான் ஒரு ரகசியத்தைச் சொல்கிறேன்.

காலையில் சூரியன் உதிப்பதற்கு முன் எழுந்து சூரிய உதயத்தின் போது குளித்து முடித்து சூரிய வழிபாட்டிற்கு எவர் ஒருவர் தயாராக இருக்கிறாரோ அவரை அற்புதமாக அந்த ஒளிக் கடவுள் வழி நடத்துவான். காலை நேரம் என்பது இருள் விலகி ஒளி தோன்றும் ஒரு பிரம்ம முகூர்த்த வேளை. படைப்புக்கு சொந்தக்காரனைத்தான் பிரம்மா என்கிறோம். காலை சூரியனைப் படைத்து உலகுக்குக் காட்டுவதால் அந்த வேளையில் பிரம்மனின் பெயர் சேர்கிறது. எப்பொழுதும் இருள் விலகும் - துன்பம் விலகும் - சந்தோஷம் சேரும் - தோஷமில்லாத காலத்தை முகூர்த்தம் என்போம். காலையிலும் இருள் விலகுவதால் அப்பொழுதைய நேரத்தை முகூர்த்தம் என்கிறோம். அப்படிப்பட்ட பிரம்ம முகூர்த்தத்தில் வழிபாடு செய்து சூரியனை நினைக்கும் போது உள்ளத்திலும் ஒரு வித ஒளி தோன்றும். உடம்பிலும் புத்துணர்ச்சி பெருகியிருக்கும். அப்பொழுது மனதும் கூட நல்லவிதமாகவே எதைப் பற்றியும் சிந்திக்கும். ஒரு நல்ல சிந்தனையே அடுத்த நல்ல சிந்தனைக்கு நம்மை அழைத்துச் செல்கிறது. இதைப் புரிந்து கொள்ளுங்கள்.

எப்படிப்பட்ட உடலும் களைத்துப் போவதுண்டு. இது இயற்கை. காரணம் நாம் நம் வயிற்றுப் பாட்டுக்காக உழைப்பதால் உடம்பு களைக்கிறது. களைக்கும் உடலுக்கு ஓய்வு தேவைப்படுகிறது. ஓய்வு என்பது படுத்து உறங்குவது மட்டுமல்ல. நிச்சலனமின்றி அமர்ந்திருப்பது கூட ஓய்வேயாகும்.

பிரம்ம முகூர்த்தத்தில் விழித்து செயல்படுபவர்கள் உடல் அன்றைய கிரக ஆதிக்க சக்திக்கு ஏற்ப ராகு காலத்தில் உடல் களைத்துப் போகக் காண்பார்கள். அப்பொழுது மனதால் ஓய்வெடுப்பார்கள். எந்தச் செயலும் செய்யாமல் மனதால் அமைதியாக இருக்கும் ராகு காலப்பொழுதில் உடம்பில் அசாத்யமான ஜீவசக்திகள் ஏற்படும். அதை பணியில் கரைத்துவிடக் கூடாது என்பதற்காகவே ராகு கால வேளையை ஓய்வாக கழிக்கும்படி உடலே பார்த்துக் கொள்கிறது. இது பிரம்மமுகூர்த்தத்தில் தினமும் கண் விழிப்பவர்களுக்கு நான் கூறுவதாம்.

பிரம்மமுகூர்த்தத்தில் கண் விழிப்பவன் வெற்றியாளன், பிரம்ம முகூர்த்தத்தில் சூரியவழிபாடு செய்பவன் மிகப்பெரிய வெற்றியாளன், பிரம்மமுகூர்த்தத்தின்போது வீட்டில் விளக்கேற்றி, அதிலும் நெய்விளக்கேற்றி ஒளியை வளர்ப்பவர்கள் தரித்திரங்கள் நீங்கப்படுவார்கள். பிரம்மமுகூர்த்த விழிப்பும், சூரியவழிபாடும் போதும். உங்கள் கஷ்டம் கவலைகளை மாற்றி அமைத்துவிடும். எப்படிப்பட்ட தோஷத்தையும் இந்த முறை மாற்றும்.

எனவே நேரத்தின் அருமையை உணருங்கள். அதிலும் பிரம்மமுகூர்த்த நேரத்தின் அருமையை ஆழமாக உணருங்கள். ஒளிக்கடவுளை தியானியுங்கள். உங்களுக்கு ஆயுள் என்கிற பெயரில் வழங்கப்பட்ட நேரத்தை தங்கச் சொட்டுபோல செலவழியுங்கள். நீங்கள் என்னைப் போன்ற முனிவர்களைத் தேடிவந்து காது கொடுக்க வேண்டிய அவசியமில்லை. நீங்களே முனிவர்களாகி விடுவீர்கள். மற்றவர்கள் உங்கள் பேச்சைக் கேட்பார்கள்.

இன்றுமுதல் ஒரு சங்கல்பம் செய்து கொள்ளுங்கள். அது இதுதான். 'சூரியன் உதிக்கும் முன் நான் எழுவேன்.' இது முதல் சங்கல்பம். 'சூரியனை வழிபட்டுவிட்டே நான் இயக்கத்தை

தொடங்குவேன்.' இது அடுத்த சங்கல்ப்பம். 'எந்த இடத்திற்கும் எந்த ஒரு சந்திப்பிற்கும் ஒரு நிமிடம் கூட தாமதமாக செல்லமாட்டேன்.., எந்த நாளிலும் லேட்டாகிவிட்டது என்கிற சமாதானத்தைப் பயன்படுத்த மாட்டேன். லேட்டே ஆகாது' என்பது அடுத்த சங்கல்பம். இந்த சங்கல்பங்களோடு திரும்புங்கள். அதன்பின் பாருங்கள். மிக அல்ப மனநிலை உடையவர்கள் கூட படிப்படியாய் மேலே வந்து விடுவீர்கள். உங்களுக்குள் தெய்வாம்சம் ஒளி விடும். நீங்கள் மட்டுமல்ல நீங்கள் சந்திக்கும் ஒவ்வொருவரும் அற்புதமான நேரக்கட்டு கொண்டவர்களாக இருப்பார்கள். ஆசீர்வாதம்!'

- மகானின் உரை முடிந்து போனது. மகானும் நின்று ஒரு விநாடி தரிசனம் தந்து விட்டு கிளம்பப் பார்த்தார். ஒரு பத்திரிகையாளர், 'ஜி ஒரு சந்தேகம்' என்று மகானின் காது படவே குரல் கொடுத்தார்.

''சந்தேகமா... இன்னுமா?''

''ஆமாம்... காலையில் எழுந்து சூரிய வழிபாடு செய்தாலே போதும் வாழ்க்கையில் முன்னுக்கு வந்து விடலாம்னு சொல்றீங்களே... எனக்குத் தெரிந்து அந்த மாதிரி ஆயிரக்கணக்கான ஏழைகள் இருக்காங்க. தினமும் வீட்டுக்கு வீடு பேப்பர் போடும் இளைஞர்கள் இப்படிப்பட்டவர்கள்தானே? அவர்கள் எல்லாம் முன்னுக்கு வருவதில்லையே...''

- பத்திரிகையாளர் புத்திசாலித்தனமாகத்தான் கேள்வி கேட்டார். கூட்டமும் ரசித்தது. மகான் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார் என்று பார்த்தது. மகானும் சிரித்தார். பின் ''ஆழமான கேள்வியல்ல இது. கேள்வி என்றால் அது ஆழமாக இருக்க வேண்டும்.'' என்றார். பத்திரிகையாளர் அசரவில்லை.

''இல்லை... உங்களுக்கு பதில் தெரியவில்லை என்று கூட நான் எடுத்துக் கொள்ளலாம் இல்லையா?'' - திரும்பவும் அவரிடம் தாக்குதல். மீண்டும் மகான் முகத்தில் புன்னகை.

''அப்படியா... அப்படியானால் அப்படியே வைத்துக் கொள்ளுங்கள். எனக்கு எல்லாம் தெரியும் என்று நான் ஒரு போதும் நினைத்ததில்லை. நீங்கள் நினைத்தாக வேண்டிய கட்டாயமும் இல்லை.''

- மகானிடம் சமத்காரமான பதில். ரஞ்சனிக்கோ அந்த பத்திரிகையாளர் மிகப் பெரிய புத்திசாலி என்றுதான் தோன்றியது. அதற்குள் இன்னொருவர் குறுக்கிட்டார்.

''தம்பி! உங்கள் கேள்விக்கு நான் பதில் தருகிறேன். மகான் அப்படிச் சொல்வதில் ஏராளமான அர்த்தம் இருக்கிறது'' - என்றார்.

''என்ன அர்த்தம்?''

''உங்கள் கையில் ஒரு பெட்டி இருக்கிறது. அதில் என்ன இருக்கிறது?''

''ஒன்றுமில்லை... எனக்குத் தேவையான புத்தகம், டைரி, நோட்டுகள்தான்!''

''இல்லை... அதில் ஒரு நல்லபாம்பும் இருக்கிறது. நீங்கள் பெட்டியைத் திறந்து வைத்திருந்தபோது அது உள்ளே நுழைந்துவிட்டது. நீங்கள் அதைத் தெரியாமல் மூடி விட்டீர்கள். திறந்து பாருங்கள்.''

- அவர் அப்படிச் சொல்லவும் பத்திரிகையாளர் முகத்தில் ஈயாடவில்லை.

''நிஜமாகவா?'' - எதிர் கேள்வி கேட்டார்.

''திறந்து பாருங்கள் தெரியும்.''

பத்திரிகையாளர் உடம்பில் உடனே ஒரு நடுக்கம் பரவியது. பெட்டியை முதல்காரியமாக கீழே போட்டார். திறப்பதற்கு தயங்கினார். பயந்தார். மற்றவர்கள் அதற்குமேல் பயந்தார்கள். அந்த பெட்டி க்ஷணத்தில் ஒரு வேண்டாத பயங்கரம் ஆகிவிட்டது.

கேள்விகேட்ட பெரியவர் தைரியமாக வந்து பெட்டியை எடுத்தார்.

''பாம்பு இருக்கிறது என்று தெரியாதவரை தைரியமாக இருந்தீர்கள். இருக்கிறது என்றவுடன் பயம் பிடித்து ஆட்டத் தொடங்கிபெட்டியைவிட்டுவிட்டீர்கள். பாம்பு இருந்தும் உங்களுக்கு ஒன்றும் ஆகவில்லையே. எதற்காக

பயம்...''

''அதுசரி... எந்த நேரம் வேண்டுமானாலும் அந்த பெட்டியை நான் திறக்கலாம். அப்போது அந்தப் பாம்பு என்னைக் கொத்தலாம் அல்லவா?''

''இவ்வளவு நேரமாக ஒன்றும் செய்யாத பாம்பு இனித்தானா செய்து விடப்போகிறது?''

''இல்லை... எச்சரிக்கையாக இல்லாவிட்டால் நான் முட்டாளாகிவிடுவேன். பாம்பு இருப்பது தெரியாதவரை நான் இருந்தது பெரிதல்ல. இனியும் பெட்டியை தூக்கிக் கொண்டு சுற்றினால் 'உனக்கு அறிவில்லையா? பெட்டிக்குள் நல்ல பாம்பு இருப்பது தெரிந்தும் அதைக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறாயே?' என்று மற்றவர்கள் நினைக்க மாட்டார்களா?''

''அப்படியானால் ஒரு விஷயம் தெரிந்திருந்தால்தான் ஊது அதற்கு ஏற்ப செயல்படுமா?''

''இல்லையா பின்னே?''

அந்த மனிதர் சிரித்தார்.

உங்கள் கேள்விக்கு நீங்களே பதிலைச் சொல்லிவிட்டீர்கள்'' - என்றார்.

''எப்படி?''

''பிரம்மமுகூர்த்தத்தை சராசரி பொழுதாக நினைத்தவரை அதனால் பெரிய பலனில்லை. அந்த பொழுதின் அருமை தெரிந்து மனம் சூரியனைக் கண்ணால் பார்த்து, கருத்தால் சந்தித்து ஒருமுகப்படுவதில் தான் பலனுள்ளது.

காலை வேளையில் பேப்பர் போடும் மனிதர்கள் பேப்பர் போடும் அதே சமயம் இந்த எண்ணத்தோடு செயல்பட்டால் அவர்கள் பேப்பர் போடுவது என்பது தான் அவர்கள் வெற்றியின் ஆரம்பம். ஒரு நாள் அந்தப் பேப்பரில் அவர்கள் வெற்றியாளர்களாக் பேசப்படும் அளவு உயர்ந்த விடுவார்கள்.

இன்னொரு விஷயம்...

வெற்றி என்பது லட்சங்களை சம்பாதித்து வீடு வாசல் வாங்குவதில்லை... ஆரோக்கியமான உடல் நிலை,

அப்பழுக்கில்லாத மனநிலை - இதுதான் மிகப் பெரிய செல்வம்.

ஒருவர் காலமெல்லாம் பாடுபட்டு பத்து லட்ச ரூபாயை சேர்த்தார். ஒருவன் அவரை குத்திக் கொலை செய்து விடுவேன் என்று கூறிய போது அந்த பத்து லட்சத்தை அவனுக்குக் கொடுத்து தப்பித்தார். உயிரும் உடம்பும் பெரிதில்லை என்றால் பணத்தைத் தருவாரா... எதுவும் நன்றாக இருக்கும்வரை அதன் அருமை தெரியாது. அதே போல எந்த உண்மையும் நமக்குத் தெரியாதவரை அதனால் நாம் பயன் பெற முடியாது. எப்பொழுதும் இந்த உலகில் வாழ்வது என்பது மனதுதான்.

மனது செத்து, உடம்பில் மட்டும் உயிர் இருப்பதால் ஒரு பயனும் இல்லை. 'உன்னை பைத்தியமாக்குகிறேன். இதற்கு ஒப்புக் கொண்டால் கோடி ரூபாய் தருகிறேன்' என்றால் ஒப்புக்கொள்வோமா?''

- கூட்டத்திற்கு வந்தவர் சொன்ன பதில் கேள்வி கேட்ட பத்திரிகையாளரை மௌனியாக்கிவிட்டது.

''உங்கள் கேள்வி எத்தனை சராசரியான கேள்வி என்று புரிகிறதா?''

''உண்மைதான். இப்பொழுது எனக்கு எல்லாம் புரிகிறது.''

''புரிவது பெரிதில்லை. செயல் படுத்துங்கள். செயல்தான் பெரிது.''

- அந்த பதில் ரஞ்சனிக்கும் ஒரு சவுக்கடி போல விழுந்தது.

'சே... எது எதையோ பெரிதாக நினைத்துவிட்டோமே... உண்மையில் நான் எதையும் இழக்கவில்லை. இன்றுதான் எனக்குப் பெரிய செல்வம் கிடைத்துள்ளது. அறிவுச் செல்வம். கருத்துச் செல்வம். இதை பத்திரமாக வைத்துக் கொண்டால் போதும் இனி நடப்பது எல்லாமே நல்ல விதமாகவே நடக்கும். நடக்கும் என்ன... நடந்தே தீரும்!'

- ரஞ்சனி நம்பிக்கையோடு அங்கிருந்து கிளம்பினாள்!

# 7

அந்த பாழடைந்த வீட்டு முன் சண்முகம் போய் நின்றபோத முன்கூரையின் கீழ் தெருப் பிச்சைக்காரர்கள் சிலர் படுத்திருந்தார்கள்.

சண்முகம் வரவும் எழுந்து கொண்டார்கள். சண்முகம் துருவேறிய பூட்டைத் திறந்து கொண்டு உள்ளே காலை வைத்தான்.

முன் பக்கம் தான் பெரிதாக பூட்டு.

பின் பக்கம் திறந்தே கிடந்தது. அதன் வழியாக பலர் வந்து போயிருப்பதை அங்கங்கே கிடந்த பிராந்தி பாட்டில்களும், சிகரெட் துண்டுகளும் காட்டிக் கொடுத்தன.

உள்ளே ஒரு ராட்சஸ சிலந்தி ஒரு பெரிய நெசவுத்தறிபோல வலை கட்டியிருந்தது. சண்முகம் வரவும் ஒரு ஓரத்தில் இருந்த அதுநடுமையத்துக்கு போய் சர்க்கஸில் பார் விளையாடுகிறவர்கள் நடுவில் நின்று எகிறிக் குதிக்கிற மாதிரி எம்பியது.

தரை எல்லாம் கால் அங்குல புழுதி.

கூரையில் அங்கங்கே ஓடு பிரிந்து சூரியக் கதிர்க்கை பிக்பாக்கெட்காரன் கை போல அத்து மீறியிருந்தது:

வாழ்ந்து திளைத்த வீடு.

அப்பாவின் சின்ன வீட்டு ஆசையால் இப்படி ஆகிவிட்டது. சின்ன வீட்டுக்காரி சினிமாவில் கவர்ச்சி நடனம்ஆடியவள்.அங்கே உடம்பில் இளமை கரையவும் மீத முள்ளதோடு சண்முகத்தின் அப்பாவை இறுக்கமாக பிடித்துக் கொண்டாள். இரண்டு பிள்ளையும் பெற்றுக் கொண்டாள். ஆனால் அப்பாவோ இரண்டு பேருக்கும் நான் அப்பனில்லை. வேறு யாரோ என்றார். வந்தது

பிரச்சினை!

சின்ன வீட்டுக்காரி கோர்ட்டுக்கு போனாள்.

சண்முகமும், அவன் அம்மாவும் தெருவுக்கு போனார்கள். சண்முகத்தின் அப்பா ஹார்ட் அட்டாக்கில் சுடுகாட்டுக்குப் போனார்.

வீடும் பூட்டப்பட்டு சீல் வைக்கப்பட்டது.

சீல் வைத்த வீட்டுக்குள் சட்டபூர்வமாகத்தான் குடி இருக்கக்கூடாது. மற்றபடி எப்படி வேண்டுமானாலும் இருக்கலாமே? அதுதான் பிராந்திப் பாட்டிலும், சிகரெட் துண்டும் கிடக்க காரணமோ?

சண்முகம் தான் வாழ்ந்த வீட்டை மலங்க மலங்கப் பார்த்தபடியே நின்று விட்டான்.

பழைய ஞாபகங்கள் வந்து ஒரு ஓட்டம் ஓடிச் சென்றன.

12 வருடங்களாக பூட்டிக்கிடந்த வீடு. வீட்டின் பின் புறம் - வேலிக்காத்தானும் காட்டுச் செடிகளும் மண்டிக்கிடந்தன. பச்சைப் பாம்பு ஒன்றும் முருங்கைக்காய் போல் தொங்கிக் கொண்டிருந்தது. அங்கங்கே பெருச்சாளிப் பள்ளங்கள் வேறு...

எல்லாவற்றையும் சீர்படுத்த வேண்டும்.

கொத்தனார் ஒருவரோடு வந்து இதைக்காட்டித்தான் விசாரிக்க வேண்டும்.

தீர்மானித்துக் கொண்டான்.

திரும்பி வெளியே வந்தான்.

அவன் வீட்டிற்கு இந்தப் பக்கமும் வீடுகளே இல்லை.

அதுவும் ரவுடிகள் வந்து டேரா போடுவதற்கு வசதியாகப் போய்விட்டது.

''சண்முகம்...'' - சற்றுத் தொலைவில் அந்த நாளைய பக்கத்து வீட்டுக்காரியான பாண்டியம்மாள் குரல் கொடுத்தாள்.

போனான்.

''வா கண்ணு... இந்த ஊடு உங்களுக்கு தீர்ப் பாயிடிச்சாமே? அப்படியா...?''

''ஆமாம் பாண்டியம்மா.''

''இனியாச்சும் உங்களுக்கு நல்லகாலம் பொறந்தாசரி.

ஆனா ஒண்ணு....''

- பாண்டியம்மாள் ஒரு இக்கு வைத்தாள்.

''என்னா பாண்டியம்மா...?''

''நீ இங்க இல்லாத இந்த பத்து பதினைஞ்சு வருஷத்துல இந்த ஊட்டுல என்னென்னமோ நடந்துடிச்சி சண்முகம்.''

''தெரியும்... ரவுடிப் பசங்க வந்து சீட்டாடுனாங்களா?''

''அதுமட்டுமா... பொம்பளங்களகூட்டிக்கிட்டு வந்து தப்புத் தண்டால்லாம் பண்ணாங்கோ.''

''சரி விடு... இனி அப்படி நடக்க உடமாட்டேன்.''

''இன்னொரு விஷயம்''

''என்ன...?''

''நான் சொல்றத கேட்டு பயந்துடாதே. காலியா கிடந்த இந்த ஊட்டுல ஏப்பப்பார் ஒரு பொண்ணு வந்து படுத்துக்கிடக்கும்.''

''சுத்தி வளைக்காம விஷயத்தைச் சொல்லு.''

''அதுக்கு எப்பப்பார் ஒரே நோவு. வைத்தியம் பாக்கவும் வசதி இல்லை. அதனால உள்ளார ஒருநாள் தூக்குல தொங்கிடிச்சு!'' - அவள் அதிர்வைப் பீய்ச்சியடித்தாள்.

''அப்படின்னா எல்லாருக்கும் தெரிஞ்சிருக் கணுமே?''

''அங்கதான் ஒரு பெரிய ஆச்சரியமே இருக்குது.''

''என்னா?''

''அந்த பொண்ணு தூக்குல தொங்குனதை நான் பார்த்தேன். ஆனா நான் நாலு பேராண்ட விஷயத்தை சொல்லி கூட்டிகிட்டு வந்து காட்டும் போது தொங்கிக்கிட்டிருந்த பாடியைக் காணோம்!''

''என்னா பாண்டியம்மா சொல்றே... இதை எல்லாம் நீ ஏன் முதல்லையே சொல்லலை.''

''நான் கூட்டிகிட்டு வந்து காட்டுனதை தெருவே நம்பலை. நீதான் நம்பப்போறியாக்கும்.''

''அப்புறம் என்ன ஆச்சு?''

''திரும்பவும் நான் சொல்றதக் கேட்டு பயந்துடாதே.

அந்த பொண்ணு உள்ளார தான் இருக்கா!''

''பாண்டிம்மா...''

''அலறாதே. நான் உள்ளதைத்தான் சொல்றேன். பல சமயத்துல ராத்திரில அந்த பொண்ணு ஜன்னல்ல நின்னு வெளிய பாக்கறத பாத்துருக்கேன். நீ ஜாக்கிரதை.''

''என்ன சொல்றே நீ... அவ செத்துட்டாளா... இல்ல உசுரோட இருந்துகிட்டு ஒளிஞ்சி விளையாடிகிட்டிருக்காளா?''

''செத்தவதான் ஆவியா சுத்தறா. இதை நான் யாராண்ட சொன்னாலும் நம்ப மாட்டேங்கறேங்காங்க. நீ நம்புனா நம்பு. விட்டா விடு.''

பாண்டியம்மாள் சண்முகத்தை நன்றாக வட்டாவை சுழற்றி ஆற்றுகிற மாதிரி ஆற்றி ஒரு கலக்கு கலக்கிவிட்டு போய்விட்டாள்.

சண்முகத்துக்கும் ஒரு கணம் 'ஹக்கு பக்கு' என்று ஆனாலும் சுதாரித்தான்.

ஆவியாவது - ஆட்டுக்குட்டியாவது? இந்த பாண்டியம்மாள் ஒரு புருடா புரூஸ்லி. அதுதான் சகட்டுமேனிக்கு அடித்துவிட்டுப் போகிறாள் என்று ஒரு முடிவுக்கு வந்தவன் திரும்பி ஒருமுறை வீட்டைப் பார்த்தான்.

ஜன்னல் திறந்திருந்தது. பகீர் என்றாகிவிட்டது.

பாண்டியம்மாள் சொன்ன மாதிரி ஒரு பெண் ஜன்னலுக்கு அப்பால் நின்று பார்த்துக் கொண்டு...!

ஒரு ஷணம் குப்பென்று வியர்த்து என்னவெல்லாமோ ஆகி நின்ற இடத்தில் நிலம் பிளந்த மாதிரி எல்லாம் உணர்ந்து குலை நடுங்கிப் போய் விட்டான்.

ஒரு நிலைக்கு வர சிறிது நேரம் தேவைப்பட்டது.

அதன்பின் தலையில் கரகம் இருக்கிறவன் பேலன்ஸ் செய்து நடப்பது போல நடந்து ஜன்னல் வழியே உள்ளே பார்த்தான்.

அழுக்கடைந்த நூலாம்படை ஆடும் உள்கூடுதான் தெரிந்தது. வலை பின்னி நடுவில் தலையணை போடாத குறையாக தூங்கியபடி இருந்த சிலந்தி கூட தன் எட்டுக்

கால்களைக் கொண்டு ஜிங்கென்று நிமிர்ந்து அவனைப் பார்த்தது. பெரிய பெருச்சாளி ஒன்றும் போலீஸ் துரத்தும் திருடனைப்போல் ஒரு கறுப்புப் பொட்டலமாய் உதிர்ந்து ஓடி சுவரில் தெரிந்த ஒரு துவாரத்தில் புகுந்து மறைந்தும் போனது.

சண்முகத்துக்குள் இப்பொழுது தான் பார்த்தது கனவா நனவா என்கிற சந்தேகம்.

திரும்பினான்.

தெருவில் பஞ்சுமிட்டாய் விற்பவன் ஒருவன் நின்று பார்த்துக் கொண்டிருந்தான்.

கிட்டே வந்தான்.

''என்னா பாத்துகிட்டிருக்கறே?''

''ஒண்ணுமில்ல,..''

''போ... போய்டு. அது ஒருமாதிரியான டுபாக்கூர் ஊடு! உனக்கு ஒதுங்க இடம் இல்லைன்னா எங்கனாபோ. இந்த ஊடு காலியாத்தானே கிடக்குதுன்னு வந்து குந்திடாதே.''

''ஏன்?''

''ஏனா... சரி போ... போய் அப்படிக் குந்து. அப்புறம் தெரியும்.''

''ஏன்... நீ சொல்ல மாட்டியா?''

''என்னாத்த சொல்ல... பேய் சினிமால காட்றதெல்லாம் சும்மா. இங்க லைவாவே பேயுங்களப் பாக்கலாம். ஒரு நேரம் ஜல்ஜல்னு சலங்கை சப்தம். ஒரு நேரம் அழுவற சப்தம். ஒருநேரம் காச்சுமூச்சுன்னு கத்தற சப்தம். உக்காந்து கேட்டுப் பார். அப்ப தெரியும்.''

''எதனால...?''

''அதான் ஒருத்தி தூக்குல தொங்கிட்டாால்ல. தூக்குல தொங்குனாத்தான் தொங்குன இடத்தையே சுத்திச் சுத்தி வருவாங்களாமுல்ல...''

''நான் இந்த ஊட்டுக்கு சொந்தக்காரன்.''

சண்முகம் நிதானமாகவும் சற்று நடுங்கும் குரலிலும் சொல்லவும் ஒருமாதிரிப் பார்த்தான்.

காக்கி பேண்ட் சட்டை... அதில் அங்கங்கே அழுக்கு

மசி. முகத்திலும் எண்ணெய்ப்பசை.

அவனுக்கு சிரிப்பு வந்து விட்டது.

''எதுக்கு சிரிக்கறே?''

''சிரிக்காம... உன்னப்பார்த்தா மெக்கானிக்காட்டம் தெரியுது. நீ போய் இது உன் ஊடுங்கறே. தாதுகுத்தறியா?''

''ஏன் மெக்கானிக்குக்கு ஊடு இருக்கக்கூடாதா?''

''அதுசரி... உன் ஊடா இருந்தா இப்படியா போட்டு வெச்சிருப்பே?''

''யோவ்... கோர்ட்ல கேஸ் நடந்துகிட்டு இருந்துச்சுய்யா. இப்பதான் ஜெயிச்சு என் பக்கம் வந்திருக்கு.''

-சண்முகம் புலம்பாத குறையாக சொன்னதைக் கேட்ட அந்த பஞ்சுமிட்டாய் அதை தான் நம்பவில்லை என்பது போல் பார்த்தபடி அங்கிருந்து நழுவத் தொடங்கினான்.

சண்முகத்துக்கு என்னவோ போலாகிவிட்டது.

இந்த வீடு வரமா? சாபமா?

---

# 8

---

சிவராமகிருஷ்ணனைப் பார்த்த ஸ்டேஷன் ஹெட் கான்ஸ்டபிள் ஒரு மாதிரி சிரித்தார்.

அவருக்கோ எரிச்சலாக வந்தது.

''என்ன சார்... எங்க வந்தீங்க?''

''ஸ்டேஷனுக்கு எதுக்கு சார் வருவோம்? கொடுத்த கம்ப்ளைண்ட் சம்மந்தமாத்தான்...''

''திருடன் கிடைச்சா சொல்லி அனுப்புவோம் சார். நீங்க ஏன் அநாவசியமா வந்து டைம் வேஸ்ட் பண்றீங்க?''

-ஏட்டின் குரல் குறுக்கில் புகுந்தது.

சிவராமகிருஷ்ணன் திரும்பினார்.

கண்களில் கோபம் ஏமாற்றத்தோடு கை கோர்த்துக் கொண்டு மின்னியது.

''சும்மா லுக் விடாதீங்க. ஃபிங்கர் பிரிண்ட்ஸை எல்லா ஸ்டேஷனுக்கும் அனுப்பியிருக்கோம். எங்க போயிடப் போறாங்க... மாட்டுவாங்க.''

''சில ஆயிரம்னா பரவால்ல சார். லட்சக் கணக்குல விட்டுருக்கேன்...''

''அப்படி லட்சக் கணக்குல விட்டாலும் விடுவீங்க. இங்க எங்களுக்கு சில்ர செலவுக்கு எதுவும் தரமாட்டீங்க...''

ஏட்டு குனிந்து சாணிப் பேப்பரில் எதையோ எழுதியபடி சொன்னதில் 'சிவராமகிருஷ்ணன்' எலும்பில் ஊசி ஏறியது போல் இருந்தது.

சட்டைப் பாக்கெட்டில் கையை விட்டார்.

ஐநூறு ரூபாய் நோட்டு ஒன்று வசப்பட்டது.

நீட்டினார்.

வாயெல்லாம் பல்லாக வாங்கிக் கொண்ட ஏட்டு, ''நீங்க போங்க. ஒரு குறிப்பிட்ட கோஷ்டி ஒண்ணு மேல கண்ணு வெச்சுருக்கோம். ஒரு இரண்டு நாள்ல போட்டு அமுக்கிடுவோம். அவனுங்களாத்தான் இருக்கணும்.'' என்று சிவராமகிருஷ்ணனுக்குள் கொஞ்சம் போல குளுகோஸ் செலுத்தினார். சிவராமகிருஷ்ணனும் திரும்பத் தொடங்கினார்!

•

அக்கம் பக்கம் இருக்கும் நண்பர்கள், உறவினர்கள் என்று எல்லோரும் தங்களிடம் உள்ள உடைகளில் சிலவற்றை சிவராமகிருஷ்ணன் வீட்டு டேபிளில் குவித்திருந்தனர்.

ரஞ்சனி அவைகளை தரம் பிரித்துக் கொண்டிருந்தாள்.

புதியது வாங்க போட்டி போட்டவளை காலம் பழையதை வாங்கி அடுக்கும்படி செய்துவிட்டது.

சிவராமகிருஷ்ணன் உள்ளே நுழையவும் அதைப் பார்த்துவிட்டு ஒரு ஓரமாய்ப் போய் உட்கார்ந்த

கண்களைக் கசக்கினார்.

''போன காரியம் என்னாச்சு...?''

''வழக்கமான பல்லவி தான்...''

''மளிகைக்கு சொல்லிட்டீங்களா?''

''இல்ல...''

''என்னங்க நீங்க... உப்பு புளி எதுவும் துப்புரவா இல்லை.''

''என்ன பண்ணச் சொல்றே? ஸ்டேஷன்ல கேட்டாங்க., இருந்த பணத்தை அவங்களுக்கு கொடுத்துட்டேன்.''

''ஆபீஸ் அக்கவுண்டுல பணமா இல்லை?''

''இருக்கு. அதுல கை வைக்க மனசு தான் இல்லை.''

''அடப் போங்க... அப்புறமா அக்கம் பக்கத்துல இருந்து சாப்பாடெல்லாம் வந்துடப் போகுது...''

''பரவால்ல ரஞ்சனி... நம்ம மேல இன்னும் பலருக்கு அன்பு இருக்கு.''

''உண்மைதான். இந்த திருட்டு நமக்கு பல விஷயங்களச் சொல்லிக் கொடுத்திருக்கு.''

''கெட்டதுல ஒரு நல்லதைப் பாக்கற அளவுக்கு இரண்டு பேரும் பக்குவமாயிட்டோம்.''

''விடுங்க. திருட்டு போனத பத்தியே யோசிக்காம அடுத்து என்ன செய்யறதுன்னு யோசிப்போம்.''

''முடியல... ஒரு காசா... இரண்டு காசா... பல லட்ச ரூபா நகைங்களாச்சே...''

''போகட்டும். இனிமேலாவது 'சின்சியரா' நேர்மையா இருப்போம். ஒருநாள் பழைய நிலைக்கு வந்துடுவோம்.''

''எப்படி இவ்வளவு பாசிடிவா உன்னால பேச முடியுது?''

''ஆஸ்ரமத்துக்கு போயிருந்தேன். அங்க மகான் பேச்சைக் கேட்டேன். சிம்ப்ளி சுபர்ப். அது என்னை மாத்திடிச்சு.''

''அப்ப... அவரைப் பாத்து பேசினியா...? திருட்டு போனதைப் பத்தி சொன்னியா?''

''இல்லீங்க. பொதுவா அவர் மேடைல பேசினதைத்

தான் கேட்க முடிஞ்சது. அதுலையே அவர் எனக்கு பதில் சொல்லிட்டார்.''

''நீ இவ்வளவு தெம்பா இருக்கேன்னா அவர் நிச்சயம் நல்லவிதமா ஹோப்ஃபுல்லாதான் எதையாவது சொல்லியிருக்கணும். என்ன சொன்னார்?''

''கால நேரத்தை மதிச்சு நடக்கச் சொன்னார். ஒரு நிமிஷம்கூட தாமதம் கூடாதுன்னார். அப்படி நடந்துகிட்டா வெற்றி நம்மை துரத்துமாம். இல்லேன்னா தோல்வியை நாம துரத்துவோமாம்...''

''ப்ச்ச்... இதைத்தான் நிறைய பேர் சொல்லியிருக்காங்களே.''

''ஆனா எவ்வளவு பேர் அதை ஃபாலோ பண்ணியிருப்போம்?''

''அதெல்லாம் இப்ப இருக்கற சொஸைட்டில சாத்யமே இல்லை. பேசலாம். அவ்வளவுதான்.''

''இல்லீங்க... சாத்யம்தான். எனக்கு நம்பிக்கை இருக்கு. ஐவில் ஃபாலோ.''

''சரி... டயத்துக்கு எல்லாம் செய்துட்டா திருட்டு போன நம்ம பொருள் கிடைச்சுடுமா?''

''நாம மதிக்காத நழுவ விட்ற நேரங்கள்தாங்க கெட்ட நேரமா உருவாகுது. இனி அப்படி செய்யாம இருந்தா நல்லநேரம் தானா வந்துட்டுப் போகுது.''

''எனக்கு நம்பிக்கை இல்லை.''

''எனக்கு நம்பிக்கை இருக்கு. இனி எதுலையும் எனக்கு எதிர்மறையான எண்ணமே கிடையாது.''

''பரவால்லியே... நான் இவ்வளவு சொல்லியும் உறுதியா பேசறியே.''

''ஆமாம். உங்க வியப்பும் பாராட்டும் தான் எனக்குக் கிடைச்சிருக்கற என்னோட ஆரம்பப்பரிசு. போகப் போக பாருங்க...''

- ரஞ்சனி சிவராமகிருஷ்ணனை வியப்பில் புதைத்தாள்.

எது எப்படியோ... அவள் இழப்பில் இருந்து விடுபட்டுத் தேறிவிட்டாள். ஆச்சரியமாகத்தான்

இருந்தது.

ஆனால் சிவராமகிருஷ்ணன்தான் பாவம்...

தாடையை தேய்த்துக் கொண்டு உத்தரத்தை பார்க்கத் தொடங்கிவிட்டார்.

''என்ன சிந்தனை... போய் வேலையைப்பாருங்க...''

''ஆமா... திரும்ப வேலை பார்த்து திரும்ப சம்பாதிக்கறேன். அதுவும் திருடன் கொண்டுகிட்டுப் போகட்டும்.''

''வேண்டாம்... தன்னம்பிக்கையும் தைரியமும் காசு பணம் இருக்கும்போது நம்மகிட்ட இருந்து பிரயோஜனமில்லை. இப்பதான் அது நம்மகிட்ட இருக்கணும்.''

''ஒரு சந்தேகம்...''

''என்ன?''

''டைம் கீப்பிங், கரெக்ட் டைம்னு சொல்றியே. அதுக்கும் திருட்டு போனதுக்கும் என்ன சம்மந்தம்?''

''நிறைய இருக்கு. அன்னிக்கு நாம வீட்டுக்கு வர்றதுக்கு சிலமணி நேரம் முந்திதான் திருட்டு நடந்திருக்கு. நாம எப்பவுமே சரியான டய்த்துக்கு சரியான தேதிக்கு எங்கையும் போறதில்ல. போற இடத்துலையும் திட்டமிட்டு காலநேரங்கள செலவழிக்கறதில்ல. அதனால எல்லாமே தள்ளிப் போயிடுது. திட்டம் போட்டு செயல்பட்டுருந்தா நாம இரண்டு பேருமே முதல் நாள் ராத்திரியே வீட்டுக்கு வந்திருப்போம். அப்படி வந்திருந்தா திருட்டு நடக்க விட்ருப்போமா?''

ரஞ்சனி சிவராமகிருஷ்ணனின் மனதில் ஒரு புதிய விதையையே ஊன்றிவிட்டாள்.

அவராலும் அதன்பின் வாயைத் திறக்க முடியவில்லை.

ஒரு புதிய எண்ணம் மட்டும் உள்ளே ஓட ஆரம்பித்தது.

'கால நேரங்கள்தான் எல்லாவற்றுக்குமே காரணமாய் இருக்கின்றன என்பது உண்மைதான்!'

★ நைட்ரிக் அமிலத்தைக் கண்டுபிடித்தவர் யார்?

★★ கிளாபர்.

# 9

மேஸ்திரி வந்தபோது சண்முகம் ஒரு வண்டிக்கு கோட்டம் சரி பார்த்துக் கொண்டிருந்தான்.

''வா சாமிக்கண்ணு. உக்காரு...'' என்று ஒரு மர ஸ்டூலைத் தூக்கிப் போட்டான்.

மேஸ்திரியும் அதில் உட்கார்ந்தார்.

''என்னா சம்முகம்... வீடு கைக்கு வந்துடுச்சாம்ல?''

''ஆமாம் சாமிக்கண்ணு. போய் பாத்துட்டு வந்தேன். ஒரே குப்பை கூளம். உத்தரமெல்லாம் உளுத்துப் போய் எப்ப உழுவலாம்னு காத்துகிட்டிருக்கு.''

''கவலையைவிடு. தட்டி எடுத்து சும்மா மினுமினுன்னு பண்ணிக் கொடுத்துட்றேன்.''

''நீ பண்ணுவே... துட்டுக்கு நான் எங்க போக?''

''அப்புறம் எதுக்கு வரச் சொன்னே?''

''அந்த ஊட்டை இடிச்சு தரை மட்டமாக்கிப்புட்டு இடத்தை வித்துப்புடலாம்னு பாக்கறேன்.''

''அடக்கெரகமே... இருந்திருந்து பத்து பதினஞ்சு வருஷம் போராடி ஊடு கைக்கு வந்திருக்கு. இடிச்சுடுங்கறியே.''

''நாம போய் இடிக் காட்டி கொஞ்ச நாள்ல 'அது' தானா இடிஞ்சிடும்.''

''அப்ப ரிப்பேர் பாப்போம்.''

''அதுக்கும் துட்டு வேணும்ல?''

''பேங்க்ல தான் லோன் தர்ராங்கல்ல...''

''எனக்கு எவன் லோன் தருவான். என்னா தொழில் பண்றேன்னு கேப்பான். தினம் இரண்டு மோட்டார் பைக்கை புடுங்கிப் போட்டு ரிப்பேர் பண்றேன்னு சொல்லுவேன். சரி போய்ட்டுவான்னுடுவான்.

தெல்லாம் மாசச் சம்பளக்காரங்களுக்குத் தாம்ப்பா
ரியா வரும்.''

''பாவி மனுஷா... இப்படி எல்லாம் யோசிக்காதப்பா. சால்றத கேளு. இப்பல்லாம் பேங்குல பணத்த வச்சுக்கிட்டு அல்லாடிகிட்டு இருக்காங்க. இருக்கற பைனான்ஸ் கம்பெனிகாரன்லாம் அல்வா கொடுக்கற பலுகளா இருக்கறதால ஜனங்க இப்ப பேங்க்குலதான் ணத்தை டெபாசிட் பண்றாங்க. அத்தொட்டு எல்லா ங்க்குலையும் கல்லா ஃபுல்லா இருக்குது. கண்ணா னக்கு வேணுமா, கந்தா உனக்கு வேணுமான்னு விகினு கீறாங்க. நீ இன்னா...''

''சரி யோசிப்போம். அப்பால ஒரு விசயம்.''

''என்னா...?''

''உனக்கு இந்த பேய் பிசாசுங்க பேர்ல நம்பிக்கை ருக்குதா?''

''கபால்னு சப்ஜெக்டை மாத்துறியே. என்னா விசயம்? ந்த ஊட்ல பேய் பிசாசு இருக்குதுன்னு எவனாவது ரீல் ட்டானா...?''

''அப்படித்தான் வெச்சுக்கையேன். பூட்டியே வச்சிருந்த ஊடு இல்லியா. பொறம்போக்குங்க பூரா பாய் டேரா போட்ருக்கானுங்கோ.

அத்தோட ஊர் மேயற கழுதைங்க வேற அங்க ஒதுங்கி ருக்குதுங்க. அதுல ஒருத்தி தூக்குலையே தாங்கிட்டாளாம்.''

''போவட்டும். அதுக்கென்ன?''

''போவட்டுமா... அவ ஆவி அங்க சுத்தி சுத்தி ருதாம்ப்பா....''

''நீ பாத்தியா?''

சாமிக்கண்ணு கையை ஆட்டி கேட்டபடி ஒரு பீடியை ற்ற வைக்கவும் சண்முகம் அதற்கு என்ன பதில் சால்லலாம் என்று யோசிக்கவும் சரியாக இருந்தது.

சில விநாடிகள் யோசித்தவன் 'பார்த்தேன்' என்றால் கலி செய்வான் என்று கருதியதாலோ இல்லை ட்டுக்காரனே பேய் இருக்கிறது என்று சொன்னால்

விலை குறைந்துவிடும் என்று பயந்தோ 'இல்லை' என்று தலையை ஆட்டினான்.

''அதான பாத்தேன்.... எங்க என்கிட்ட வரச் சொல்லேன் அந்த பேயை... அதெல்லாம் சும்மா டுபுக்கு. நம்பாதே. சரி இப்ப என்ன பண்றே? வேலை இருக்குதா...?''

''பாத்துக்கிட்டிருக்கேல்ல. இந்த வண்டி வீல் ஒரே பெண்டு. அதான் கோட்டம் பாத்து தட்டிக்கிட்டு இருக்கேன்.''

''பெண்டை அப்புறம் நிமித்தலாம். அப்படியே போட்டுட்டு வா. முதல்ல ஊட்டப் பாப்போம்.''

''பொறு... வேலையை முடிச்சிட்டே வர்றேன்....''

சண்முகம் சுறுசுறுப்பானான். கைகள் மளமளவென்று இயங்கின. 'நொட்... நொட்' என்று தட்டி சக்கரத்தை லெக் ஸ்டாண்டில் ஓடவிட்டு ஒண்ணரைக் கண்ணால் அதன் ஓட்டத்தைப் பார்த்து அது சீர்ப்பட்டு விட்டதை உணர்ந்து ஸ்டாண்டை விட்டு இறக்கி 'பீட்டர்' என்று குரல் கொடுக்க ஒரு அழுக்கு ஜீன்ஸ் சிறுவன் 'அண்ணே' என்றபடி ஓடிவந்தான்.

''பூட்டுடா... அப்படியே பார்ட்டி வந்தா உக்கார வை. நான் போய்ட்டு வந்துட்றேன்.''

- என்று நிமிர்ந்தான். வேஸ்டேஜ் க்ளாத்தை தேடி எடுத்து கையில் உள்ள மசியைத் துடைத்தான் சாமிக்கண்ணுவுக்கு அவனது சுறுசுறுப்பு வியப்பைத் தந்தது. அது சாமிக்கண்ணின் புருவத்தில் ஒரு கதி அரிவாள் சின்னத்தையே உருவாக்கியது.

''போலாம் சாமிக்கண்ணு...'' - என்று ஒரு அடிகூட போட்டிருக்கமாட்டான். எதிரில் போலீஸ் இன்ஸ்பெ டர் ஒருவர் பைக்கில் வந்து கொண்டிருந்தார்.

க்ஷணத்தில் சண்முகத்தின் அடிவயிற்றில் ஒரு சுருக் முடிச்சு விழுந்து அமிலமும் 'ப்ளச்... ப்ளச்' என்று சுரக் ஆரம்பித்துவிட்டது.

வீட்டின் உரிப்பானையில் கிடக்கும் நெக்லஸ் மனக்கண்ணில் ஒரு மின்னு மின்னியது.

இன்ஸ்பெக்டரின் வண்டியில் என்ஜின் சப்தம் ராக ஆலாபனை பாடியது. 'சிக்... சிக்...சிக்... சிக்...' என்று சூப்பர்ட்யூனிங்வண்டியை பிரேக்கடித்து படுஸ்டைலாக நின்றார்.

ஒடுங்கிய ரேபான் கூலிங் கிளாஸையும் கண்களி டமிருந்து விடுவித்தார்.

சண்முகம் வெறித்தான். உள்ளுக்குள் குஜராத்தின் பூகம்ப நடுக்கத்தைவிட கூடுதல் நடுக்கம். 9.5 ரிக்டர்!

''நீதான் மெக்கானிக்கா?'' - இன்ஸ்பெக்டருக்கு உப்புக்காகிதத்தில் தேய்த்த மாதிரி ஒருகரகரப்பான குரல்.

''ஆமாம்... சார்...''

''குப்பத் தொட்டி...'' - அவர் குப்பத் தொட்டி என்கவும் 'குப்'பென்று ஸ்ப்ரே செய்த மாதிரி ஆகிவிட்டான் - நெக்லஸ் கிடைத்த குப்பைத் தொட்டி ஞாபகத்தோடு.

''சார்...!'' என்றான் நடுக்கமாக.

''குப்பத் தொட்டி மாதிரி இப்படியா அழுக்கா இருப்பே...? ஏய்யா... வண்டில கொஞ்சம் அடைப்பு இருக்கு. பார்த்து வை.''

- என்றபடியே வண்டியை விட்டு இறங்கி ஸ்டாண்ட் போடாமல் சரித்து நிறுத்தினார்.

''சரி சார். பார்த்து வைக்கறேன்...''

''அரை மணி நேரத்துல வேணும். கிடைக்குமா?''

''பாத்து வைக்கறேன் சார்...''

பணிவில் சண்முகத்தின் நெற்றி தரையை தொட்டது. திரும்பி நடக்கத் தொடங்கினார் இன்ஸ்பெக்டர்.

சாமிக்கண்ணுக்கு சிரிப்பு வந்தது.

''எலேய் எதுக்கு இந்த டாணாக்காரனைப் பார்த்து இப்படி நடுங்கறே...?''

''அது ஒண்ணுமில்ல சாமிக்கண்ணு. எனக்கு போலீஸ்னாலே எப்பவுமே பயம்...''

''உனக்கு மட்டுமில்ல... ஊருக்கே பயம்தான். அதுக்காக குத்தவாளி மாதிரியா மிரண்டுபோய் பாப்பே.''

''சரி... சரி... அந்த பேச்சை விடு. உன்கூட

கிளம்பலாம்னு பார்த்தா வரமுடியாது போல இருக்குதே. பாரு... வண்டி வந்துட்டுது...''

''உன் அசிஸ்டெண்ட் பீட்டர் பாக்கமாட்டானா...?''

''இல்லப்பா... அவன் எடுபிடி வேலைக்குத்தான் லாயக்கு...''

''நீயா அப்படி முடிவு பண்ணாதே. அவனை நம்பி விடு. அவன் பாத்து வைப்பான். டேய் தம்பி பீட்டர்... நீ இந்த வண்டியை விட்டா பாப்பே தானே...?

- பீட்டர் பெரிதாக தலையை ஆட்டினான்.

''பார்... நம்பணும்பா யாரையும். கிளம்பு, கிளம்பு. எனக்கு நேரமாகுது பார்...''

- சாமிக்கண்ணு பறந்தான். அரை மனதாக சண்முகம் தொற்றிக் கொண்டு தொடர்ந்தான்!

---

# 10

வீட்டுக் கதவை திறக்கும்போது நல்ல கறுத்த மரப்பல்லி ஒன்று வலதுதோளில் விழுந்து ஓடியது. சண்முகம் அலறிவிட்டான்.

''எதுக்கு கத்தறே... பல்லிதானே...?''

''எதுவா இருந்தா என்ன... திடுதிப்புன்னு விழுந்தா...?'' - கேள்வியோடு உள்ளே மிரள மிரளப் பார்த்தபடி காலை வைத்தான்.

சாமிக்கண்ணுவின் பார்வையும் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது. கண்ணிரண்டு மட்டுமே அவனுக்கு இன்ச் டேப். ஒரு மில்லிமீட்டர் சுத்தமாக அளக்கும் ஆற்றலை அது கொண்டிருந்தது.

''அந்தக் காலத்து வீடு... கட்டி எத்தனை வருஷம் இருக்கும்?''

''யாருக்குத் தெரியும்... ஒரு நூறு வருஷம்

இருக்கலாம்...''

''பரவால்ல... இன்னும் வீட்டுச்சுவர்களுக்குத் தெம்பு இருக்குது.'' - என்றபடியே அவற்றை கையால் ஒரு குத்து குத்தினான். பொலபொலவென்று காரை உதிர்ந்து கொட்டியது.

உள்ளே செங்கல் தெரிந்தது.

''பாத்தியா... என்னமா உதிர்ந்து கொட்டுது...!''

''கொட்டட்டும்... கொட்டட்டும். எல்லாத்தையும் சரி பண்ணிடலாம்'' - என்ற சாமிக்கண்ணுவின் காலடியில் ஒரு சிகரெட் பாக்கெட் இருந்து நசுங்கியது.

''எவனோ உள்ற படுத்து தம் அடிச்சிருக்கான்...''

- சொல்லும்போதே ஒரு இடத்தில் ரத்தத் திப்பி கண்ணில் பட்டது.

கிட்டே சென்று பார்க்கவும் ரத்தம்தான் என்று ஊர்ஜிதமாகியது.

''ரத்தம்...''

''ரத்தமா?''

''ஆமா... யாரோ இங்க ஏடாகூடமா ஏதோ பண்ணியிருக்காங்க. முதல்ல பின்னால ஒரு கதவைப் போட்டு பூட்டு போடு.''

''போட்றேன்... வீட்டைப் பாக்கறேல்ல. என்ன செலவாகும்?

''துப்புரவா தட்டி சரி செய்யணும். கிட்டத்தட்ட ஆயிரத்து நூறு சதுர அடி இருக்கு. சதுர அடிக்கு ரிப்பேர் சார்ஜ் நூத்து ஐம்பதுன்னா... கணக்கு போடு - லட்சத்தி எம்பது ரூவாகிட்ட வரும்.''

''லட்சத்தி எம்பதா...?'' - வாயைப் பிளந்தான் சண்முகம்.

''மிரளாதே... தோள்ல பல்லி விழுந்து ஓடியிருக்கு. உனக்கு செல்வம் வரும்.''

''மண்ணாங்கட்டி வரும்... நீ வேற!''

''நம்புப்பா... உனக்கு நல்ல காலம் பொறந்துடிச்சி. ஆமா சில இடத்துல புதுசா பூசினது மாதிரி இருக்குதே சமீபத்துல எதாவது வேலை பாத்தியா?''

''12 வருஷம் கழிச்சு இப்பதான் வர்றேன். வேலை பாத்தியான்னு கேக்கறியே?''

''பாரு... ஒரு இடத்துல மண் பூச்சு. ஒரு இடத்துல சிமெண்ட்டுப் பூச்சு...''

''தெரியல சாமிக்கண்ணு. எங்கம்மாகிட்டதான் கேக்கணும்.''

- சண்முகம் சொன்னபடியே கொல்லைப்புறம் சாமிக்கண்ணை அழைத்துச் சென்றான்.

சாமிக்கண்ணுக்கு திடீரென்று இடுப்புக்குக்கீழே சற்று அவஸ்தையாகியது.

''கொஞ்சம் இரு... அப்படி ஒதுங்கி உக்காந்துட்டு வந்துட்றேன்...''

- சாமிக்கண்ணு நகர்ந்தான். சண்முகத்துக்கு அவன் இல்லாமல் தனியே நிற்க என்னவோபோல் இருந்தது. ஜன்னலில் தெரிந்த பெண்ணின் முகம் திரும்ப தோன்றுமோஎன்றுகூட தோன்றியது.

திடும்மென்று பெருச்சாளி என்று மேலே கூரையில் ஓடியது. அண்ணாந்து பார்த்தான்.

சொத்தென்று ஏதோ ஒன்று கழுத்தில் விழுந்தது. என்னவென்று பார்த்தபோது கண்ணில் மின்சாரம் ஏறினதுபோல ஒரு ஒளி.

அவன் கையில் நன்கு பருத்த தங்கச் சங்கிலி ஒன்று!

தேவுடா!

இது எப்படி சாத்தியம்... எலி சங்கிலியைக் கொண்டு வந்து போடுகிறதே. தங்கமா... இல்லை பித்தளையா...?

மனதில் திக்கு முக்காடல்.

சாமிக்கண்ணு திரும்பிக் கொண்டிருந்தான்.

கையில் இருந்த சங்கிலியையும் பார்த்துவிட்டான்.

''என்னது... தங்கச் சங்கிலியா?''

''அது... அது... ஆமாம் அப்படித்தான் தெரியுது...''

''தெரியுதா... சரிதான். உங்கம்மா சங்கிலி உனக்கு தங்கமான்னு தெரியலையா...?''

''அது... அது...''

''வீட்டு வேலைக்காக கழட்டிக் கொடுத்தாங்

களாக்கும்?''

- சாமிக்கண்ணுவின் யூகமே சண்முகத்துக்கு ஒரு வழியைக்காட்டியது.

''அ... ஆமாம்! ஆமாம்!''

''எத்தனை பவுன்?''

''அதுவந்து... பத்து பவுன்!''

''பத்து பவுனுன்னா கிட்டதட்ட 35,000 ரூபா! அடகுல வெச்சு வேலையை ஆரம்பிச்சுடலாமே.''

''அடகுலையா?''

''பின்ன... விக்கவே சொல்லிடிச்சா உங்கம்மா?''

''இல்ல... இல்ல... அடகுதான்! அடகுதான்...!''

- சண்முகம் அழுத்தம் கொடுத்துச் சொன்னான். எலி மேலே திகிடு தம்பாக ஓடிக் கொண்டிருந்தது.

''முதல்ல ஒரு எலிப் பொறியை வாங்கி வை... பாரு ஒலிம்பிக்ல ஓடற மர்திரி ஓட்றதை!''

''ஆமாமா... பாவம். போகட்டும் விட்று...''

''சரி... வேலையை எப்ப ஆரம்பிக்கலாம்?''

''வேலையை... தெரியலியே!''

''என்ன தெரியலியே... அதான் கைல நகை இருக்குதுல்ல. அவனவன் அஞ்சு காசு கைல இல்லாம கடன்லையே வீட்டைக் கட்றாங்க. நீ முப்பதாயிரம் சொச்சத்தை வெச்சுகிட்டு தெரியலங்கறே. என்னாச்சு உனக்கு?''

''தெரியலைன்னா... தேதி தெரியலைன்னு சொன்னேன்.''

''காலண்டர பார்த்தா தெரிஞ்சிட்டு போவுது.''

சாமிக்கண்ணு அசால்டாக பேசிக் கொண்டே வெளியே சென்றான். சண்முகமும் வேர்க்காத குறையாக பின்தொடர்ந்தான்.

''கதவை பூட்டு... போகலாம்.''

''நல்லா பாத்துட்டியா?''

''பாத்துட்டேன். ஒண்ணரை லட்சம் பேங்க்ல லோன் போடு. நான் வாங்கித் தரேன். மிச்சத்துக்குதான் கைல நகை இருக்குதே.''

''சரி...'' - சண்முகம் கோவில் மாடு மாதிரி தலையாட்டினான்.

அதன்பின் பைக்கில் ஏறிக் கொண்டு இருவரும் அந்த வீட்டை விட்டு மறைந்தனர்.

வழியிலேயே சாமிக்கண்ணு இறங்கிக் கொண்டான்.

சட்டைப் பாக்கெட்டில் எலி போட்ட எந்த நகை கனத்தது. அது தங்கம்தானா... இல்லை பித்தளையாக இருக்குமா? கேள்வியின் முடிவில் ஆசாரியை பார்க்கத் தீர்மானித்தான். தீர்மானித்த வேகத்தில் தங்கமாக இருந்துவிட்டால் - அதிலும் வீட்டில் கிடைத்தது என்றால் பாதியைக் கறந்துவிடுவான் என்று தோன்றியது.

என்ன செய்யலாம்?

கேள்வி பிராண்ட ஆரம்பித்தது.

---

# 11

அடகு கடையில் சேட் சங்கிலியை உரசிவிட்டு ''ஆங்... இந்த தங்கத்துக்கு எவ்வளவு கேக்கறே?'' - என்று கேட்டபோது நிஜமாலுமே சண்முகத்துக்கு உடம்பும் மனதும் சில்லிட்டுவிட்டது.

''எவ்வளவு வெயிட் இருக்கு சேட்...''

''பதிமூணு பவுன்!''

''நல்லது... ஒரு நாப்பதாயிரம் தா...''

- வாயில் அந்த தொகைதான் வந்தது. பதிலுக்கு சேட் அநாவசியமாக எதுவும் பேசவில்லை.

''அச்சா...'' என்று நாப்பதாயிரத்தை நான்கு கட்டாக எடுத்து வைத்தான்!

சண்முகத்துக்கு வானில் மிதக்கிற மாதிரி இருந்தது.

'இந்த சங்கிலி இப்படி கிடைக்க எது காரணம்? ஓடிய எலியா? இல்லை தோளில் விழுந்த பல்லியா?

அதுவுமில்லை... வீட்டில் அடிப்பாளையில் இருக்கும் அந்த நெக்லஸா?'

கேள்விகள் பட்டிமன்றம் நிகழ்த்தப் பார்த்தன. முதலில் நெக்லஸ், அடுத்து சங்கிலி! நெக்லஸை குப்பைத் தொட்டி கொடுத்தது. சங்கிலியை எலி வந்து கொடுத்திருக்கிறது. யாரிடமாவது சொன்னால் நம்புவார்களா? சண்முகத்துக்கு எவரெஸ்டின் உச்சியில் நின்று கொண்டு ஊர்ந்து செல்லும் ஒரு மேகத்தை தழுவிக் கொண்டிருக்கிற மாதிரிகூட தோன்றியது.

# 12

அதிகாலை மணி ஐந்து.

அலாரம் அலறியது.

ரஞ்சனியும் மளுக்கென்று கண் திறந்தாள். எழுந்து சென்று மளமளவென்று வேலைகளைத் தொடங்கினாள். பல் விளக்கி, டாய்லெட்டில் ஒதுங்கித் திரும்பி, குளித்து முடித்து பூஜை அறையில் விளக்கேற்றி வழிபாடு முடித்து மொட்டை மாடிப் பக்கம் வந்தபோது கிழக்கு அடிவானில் சூரியனின் வட்ட விளிம்பு தெரிந்தது!

அடிவானமும் தங்கக் குழம்பைக் கொண்டு பிரஷ் செய்த மாதிரி ஒரு தகதகப்பைக் காட்டிற்று. ஊடே பறவை அம்புகள்.

ரஞ்சனிக்கு அந்த காட்சியே புதிதாக இருந்தது.

'ஒவ்வொரு காலையும் இப்படிப்பட்டதுதான்.

மொட்டை மாடிகளுக்கு மட்டும் கண்கள் இருந்தால் அவை தினமும் ரசித்துக் கொண்டிருக்கும். அவை செய்த பாக்யத்தைக்கூட இத்தனை நாளில் நான் செய்யாதபடி தூக்கம் என்னை ஆக்ரமித்துவிட்டதே' என்று ஒரு சன்னக் கவலை - அவளிடம் ஒரு பெரு மூச்சைப்

பிடுங்கியது. சுற்றிலும் நிறைய மரங்கள். அவைகளில் பறவைப் பஞ்சாயத்து! 'குயிக்முயிக்ட்விச்ட்ரெளச்ச்...' என்று வார்த்தைக்கு வசப்படாத அதன் அலகுச் சப்தங்களில் சப்தஸ்வரங்களும் ஒளிந்து கொண்டு தூணுக்குத் தூண் ஒளிந்து விளையாடும் ஒரு சின்னப் பெண்ணைப்போல அவையும் விளையாடுவதாகத் தோன்றியது.

பக்கத்து மாடியில் ஒருபயில்வான் இருக்கிறார். அவர் தலைக்கு மேலே கர்லாக் கட்டையைச் சுழற்றிக் கொண்டிருந்தார். ஒரு அதிசயம்போல மாடியில் ஈரத்தலையும் விரவல் குங்கும நெற்றியுமாக வந்து நிற்கும் ரஞ்சனியைப் பார்த்தார். அவளும் பார்த்தாள்.

''ஹாய் அங்க்கிள்! குட்மார்னிங்!''

''என்னம்மா இது காலங்கார்த்தால...''

''சூரிய நமஸ்காரம் பண்ண வந்தேன்...''

''வெரிகுட்... பண்ணு பண்ணு... கண்ணுக்குத் தெரியற கடவுள் சூரியனும் சந்திரனும்தானே?''

-அவர் சந்திரனையும் விட்டுவிடாதே என்கிற மாதிரிப் பேசினார். அந்த க்ஷணமே பெளர்ணமி பூஜையையும் வழக்கப்படுத்திக் கொண்டுவிட வேண்டும் என்று ரஞ்சனியும் தீர்மானம் செய்துவிட்டாள்.

சூரியனும், காற்றால் நிரம்பும் பலூன் தரைமேல் புடைத்துக் கொண்டு எழும்புகிற மாதிரி முழுவதுமாய் வெளிப்பட்டு மேலேற ஆரம்பித்துவிட்டான்.

நெருப்புப் பந்தும், தங்கத் தட்டும் ஒன்று சேர்ந்து ஜிகுஜிகுவென்று ஒளிவிட்டபடி மேலேறுகிற மாதிரி இருந்தது.

ரஞ்சனி கைகூப்பி வணங்கினாள்.

வெளிச்சூரியன் இப்பொழுது அவள் மனதில் நுழைந்தான். உள்ளேயும் ஒரு உதயம். அதன் எதிரொலி அப்போதே தெரிந்தது. ரத்த ஓட்டத்திலிருந்து, விடும் மூச்சுக் காற்றிலிருந்து அனைத்திலுமே ஒரு பரவச உணர்ச்சி தொற்றிக் கொண்டிருந்தது.

உதறிக்காயப் போட்ட ஒரு சாக்குப்பைபோல உடம்பு

பாரமின்றி மிதக்கிற மாதிரியெல்லாம் இருந்தது.

அந்த உணர்வுகளை அசைபோட்டபடியே அடுத்தடுத்து காரியங்களில் இறங்கிவிட்டாள்.

ஒன்பது மணி!

காய்கறி மார்க்கெட்டில் இருந்தாள்.

எப்பொழுதும் பதினோரு பன்னிரண்டு மணிக்குத் தான் வந்திருக்கிறாள். அவ்வளவு பெரிய மார்க்கெட்டில் வாழைத்தண்டு, மணத்தக்காளிக்கீரை, வாழைப்பூ, பாகற்காய், பொன்னாங்கண்ணி என்கிற ஐட்டங்களை அவள் கண்ணால்கூட பார்த்தது கிடையாது.

வந்தது தெரியாமல் விற்றுத் தீர்ந்துவிடும். இன்று அவ்வளவும் கண்ணில் பட்டு ஆச்சரிய மூட்டின.

''என்ன தாயி இன்னிக்கு நேரத்துக்கு வந்துட்டே'' என்று கடைக்காரர்களில் ஒருவன்கூட கேட்டான்.

''என்னப்பா பண்ணச் சொல்றே... காய் வாங்கக்கூட டயத்துக்கு வரணும்ங்கறது இப்பத்தானே எனக்குத் தெரிய வந்திருக்கு...''

''டயத்துக்கு வந்தாதாம்மா எதுவும் ஃப்ரஷ்ஷா கிடைக்கும். பின்னால வர்றவங்களுக்கு எப்பவுமே சொத்தையும் புளுத்தலும்தான்.''

- அவன் காய்கறியைப் பற்றிச் சொன்னானா; இல்லை வாழ்க்கையைப் பற்றிச் சொன்னானா என்று ஒரு ஷணம் அவளுக்குச் சந்தேகமாகிவிட்டது.

''நூத்துல ஒரு வார்த்தை'' என்றாள் அவனைப் பார்த்து. அப்படியே *மளிகைக் கடைப்பக்கமும் நடந்தாள். இடையில் மார்க்கெட்டில் ஒரு பரபரப்பு. காரணத்தை கண்கள் தேடியதில் போலீஸ் கமிஷனர் ஒருவர் அவரே காய் வாங்க வந்திருந்தார்.

''இவர் தங்கமான மனுஷன். தன்னாண்ட சல்யூட் கட்ற போலீஸையெல்லாம் வேல வாங்கமாட்டார். நூல் புடிச்ச மாதிரி இருக்கும் பேச்சு...''

- கடைக்காரன் ஒருவன் அவரைப் பற்றி ஒரு திருக்குறள் விமர்சனம் செய்தான்.

போலீஸ் கமிஷனர்... நேர்மையான மனிதர் என்கிற அந்த அறிமுகங்களே அவளை உந்தித் தள்ளியது. அவரை நோக்கி நெருங்கினாள்.

''வணக்கம் சார்...''

- அவரும் திரும்பினார்.

''என் பேர் ரஞ்சனி!''

''சந்தோஷம்.''

''உங்ககிட்ட என்னோட குறை ஒண்ணைச் சொல்லலாமா?''

''நான் இப்ப போலீஸ்காரன் இல்லம்மா. என் குடும்பத்துக்காக காய் வாங்க வந்துருக்கற ஒருத்தன்.''

''எனக்கும் போலீஸ் மேல நம்பிக்கை இல்லை. இப்படி பொறுப்பான ஒருத்தர்கிட்டதான் என் குறையை சொல்லணும்னு ஆசை!''

- ரஞ்சனி பதிலுக்கு அவரை மடக்கிக் கட்டினாள். அவர் சிரித்தார்.

''சொல்லும்மா. என்ன விஷயம்?''

-அவள் நடந்து முடிந்த திருட்டைப் பற்றி விலாவரியாக சொல்லி முடித்தாள்.

அவர் நெற்றியில் வரி ரேகைகள் மாறி மாறி விழுந்து அலைந்தன. கண்ணிரண்டும் அடிக்கடி அதிர்ச்சியிலும் ஆச்சரியத்திலும் சுருங்கிச் சுருங்கி விரிந்தன.

இறுதியாக ''நான் பாத்துக்கறேம்மா... நீ கவலப்படாதே'' என்றார்.

அவளும் பதவிசாக ஒரு பதில் வணக்கத்தைச் சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

காலையில் மனதில் நுழைந்த சூரியன் ஒரு மூன்று மணி நேரத்தில் ஒரு மனித சூரியனை அடையாளம் காட்டி மனபாரத்தை இறக்கிவிட வழிகாட்டிவிட்டான்.

அவளுக்கும் உடம்பு மனது இரண்டும் மிக மிக லேசாக ஆகிவிட்டிருந்தது.

வீட்டுக்குள் நுழைந்தபோது சிவராமகிருஷ்ணன் அப்பொழுதுதான் எழுந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். ரஞ்சனியைப் பார்த்தவர், ''என்ன ரஞ்சா...

டைம் மேனேஜ்மெண்ட்டை ஆரம்பிச்சுட்டியா?'' என்று கேட்டபடியே சிரித்தார்.

''அதுக்கான பல்னையும் இன்னிக்கே பாத்துட்டேங்க...''

''எப்படி?''

''மார்க்கெட்ல போலீஸ் கமிஷனரைப் பார்த்தேன். நம்ம வீட்டு திருட்டைப் பத்தி சொன்னேன்.''

''அட... கமிஷனர் எல்லாம் காய் வாங்க வர்றாரா?''

''அவரும் டைம் மேனேஜ்மெண்ட் தெரிஞ்சவர். அதுதான் மார்க்கெட்டுக்கு வந்திருக்கார்.'' - இதுதான் சமயம் என்று சிவராமகிருஷ்ணன் கன்னத்தில் செல்லமாய் ஒரு அறை அறைந்தாள்.

இதமான அறைதான்... ஆனால், சுரீர் என்கிற வலி.

''பாத்தியா இதுதான் சாக்குன்னு ஒரு அறை அறைஞ்சிட்டியே...''

''டயம் கிடைக்கும்போது சொல்ல வேண்டியத சொல்லிடணும். அப்பதானே உறைக்கும்.''

''இதுலையும் டயமா...?''

''இல்லையா பின்னே... மத்த நேரத்துல சொன்னா நீங்க, நீ பெரிய யோக்யமான்னு திருப்பில்ல அறைஞ்சிருப்பீங்க....''

''வாஸ்தவம்தான். இப்ப உனக்கு நேரம். நான் கேட்டுக்கத்தான் வேணும்.''

''கேட்டுக்கிட்டா போதாது. திருந்தணும்.''

''அம்மாடி... என்னை விட்று. அந்த சர்மியார் சொன்னதை நீ இப்படி குரங்குப் பிடியா பிடிச்சுப்பேன்னு நான் எதிர்பார்க்கவே இல்லை.''

''பிடிச்சுகிட்டதாலதான் கமிஷரைப் பார்க்க முடிஞ்சது. ஃப்ரெஷ்ஷா காயெல்லாம் வாங்க முடிஞ்சது. அல்ப வாழைத் தண்டுக்கு அலைஅலைன்னு அலைவேனே... இப்ப பாருங்க...''

- கூடையை காட்டினாள். அதற்கு மேல் அவரால் அவளிடம் மன்றாட முடியவில்லை. இருந்தாலும் ஒரு ஆக்ரோஷம் - இல்லையில்லை அவநம்பிக்கை

அவரிடம் கேள்வியாகத் தொடங்கியது.

''சரி இவ்வளவு பேசறியே... டயம் டயம்னு உயிரை விட்ற எவ்வளவோ பேரை எனக்குத் தெரியும். நம்ம பக்கத்து வீட்டு தாத்தாவையே எடுத்துக்க. அஞ்சு மணிக்கு மேல அவருக்குதூக்கமே வராதாம். அவர் என்ன குபேரனாவா ஆயிட்டார்...?''

''நல்ல கேள்விங்க. டயம் கீப்பிங் அப்படிங்கற ஒரு டிசிப்ளினால பணம் வந்தாத்தான் அது வெற்றி - இல்லேன்னா வேஸ்ட்டுங்கற மாதிரி நினைக்கறீங்க போல இருக்கு?''

''வாழ்க்கையே பணம் தானேம்மா? அதைத் தொலைச்சுட்டுதானே நீயும் நானும் இப்ப முழிச்சுகிட்டு நிக்கறோம்...''

''தப்புங்க... அது தொலைஞ்சதாலதான் நான் விழிச்சுகிட்டிருக்கேன். காரணமில்லாம காரியங்கள் இல்லைன்னு மகான் அருணாசலமூர்த்தி அடிக்கடி சொல்வார்.''

''இதெல்லாம் சும்மா சொல்ற சால்ஜாப் ரஞ்சனி. எனக்கு நீ சரியான பதிலைச் சொல்லலை.''

''சரியான பதிலைத் தான் சொல்லிகிட்டிருக்கேன். பக்கத்துவீட்டுத்தாத்தாசம்பாதிக்கலைன்னு உங்களுக்கு தெரியுமா?''

''வெட்டியா உக்காந்து ராமாயணம் படிச்சுகிட்டு இருக்கார். நேரம் போகமாட்டேங்குதுங்கறார். நீ சம்பாதிக்கறாருங்கறையே.''

''சம்பாதிக்கறதுன்னா என்னங்க... வேர்த்து வடிய வேலை பார்த்து ஒண்ணாம் தேதியானா சம்பளம் வாங்கறதுக்கு பேர்தான் சம்பாத்யமா?''

''அப்ப அதுக்கு பேர் என்ன?''

''அது சம்பாதிக்கறதுல ஒரு வழி. சொல்லப்போனா கொஞ்சம் வழக்கமான - முட்டாள்தனமான வழி.''

''எது புத்திசாலித்தனமான வழி?''

''அப்படிச் செய்யறவங்களுக்கு சமமா - உக்காந்த இடத்துல சம்பாதிக்கறவங்களும் இருக்காங்க. அதுல

ஒருத்தர்தான் நம்ம தாத்தா...''

''நீ குழப்பறே... அவர் ஒரு வெட்டி ஆபீசர்ங்கறேன் நான். நீ சம்பாதிக்கறாருங்கறையே...''

''கொஞ்சம் இந்தப்பக்கத்து வீட்டு தாத்தாவை பார்ப்போமா?''

''எதுக்கு...?''

''இவர் என்ன பண்றாரு?''

''இவரால என்ன பண்ண முடியும் சொல்லு? எப்பொழுதும் நெஞ்சுல சளி, மூச்சுக்காத்துல ஆஸ்த்மா, முழங்கால் வலி, மூட்டு வலின்னு சதா புலம்பல். என் வரைல இரண்டு பேருமே வேஸ்ட். அவங்க செத்துப் போயிடலாம்.''

''ரொம்ப அவசரமான முடிவு. ரொம்ப ஆத்திரமான பதில்.''

''எது சரியான பதில்? சொல்லேன்.''

''இந்த தாத்தா டாக்டருக்குன்னு தினம் ஐம்பது நூறு தர்றதில்ல. தராத ஒண்ணெல்லாம் சம்பாத்யம்தான்! இந்த தாத்தா எப்பவும் வீட்ல முழிச்சுகிட்டிருக்கார். யார் வீட்ல இருந்தாலும் இல்லேன்னாலும் அவர் இருக்கார். நம்ம வீட்ல ஒருத்தர் அந்த மாதிரி இருந்திருந்தா திருடன் வந்திருக்கமாட்டான். ஆகையாலதான் அவர் வீட்ல திருடு போகலை. திருடு கொடுக்காத எல்லாமே அவர் சம்பாதிச்சதுதான்.

ஆரோக்யமா இருக்கறதால பள்ளிக்கூடத்துக்கு பேரன் பேத்திகளை கொண்டுபோய் விட்டுட்டுவரார். ஆட்டோ, சைக்கிள் ரிக்ஷா செலவு இதனால மிச்சம். அதுமட்டுமல்ல - தன் சந்ததில ஒண்ணு நல்ல விதமா நடந்து பள்ளிக் கூடம் போறதை அவர் கண்ணால பாக்கறார். அதுக்கு அவர் எவ்வளவு கொடுத்து வெச்சிருக்கணும்? நமக்கு இன்னும் குழந்தையே பிறக்கலை. நமக்கு இனி ஒரு குழந்தை பிறந்து அது படிச்சு ஆளாகி அவங்களுக்கு கல்யாணம் ஆகி பிறகு அவங்களுக்கு குழந்தை பிறந்து அவங்க பள்ளிக்கூடம் போய்... நினைச்சுப்பாருங்க. அதெல்லாம் எவ்வளவு

பெரிய பரிசுங்க. நமக்கு கிடைக்குமோ கிடைக்காதோங்கற ஒண்ணை அவர் தினம் தினம் அனுபவிச்சுகிட்டிருக்கார்.

ஓய்வுக்கு ஓய்வு.

ஆரோக்கியத்துக்கு ஆரோக்கியம்.

சந்தோஷத்துக்கு சந்தோஷம். - எதை அவர் சம்பாதிக்கலை. இதுல எதை நீங்க சம்பாதிச்சுட்டீங்க. இல்ல இந்த பக்கத்து வீட்ல அல்லாட்றாரே வியாதித்தாத்தா அவர் சம்பாதிச்சுட்டார்?''

-ரஞ்சனி கேட்டு முடித்து விட்டு ''யோசிச்சுவையுங்க. ஏன்னா உங்களுக்கு வேலை இல்ல. ஆனா எனக்கு நிறைய வேலை இருக்கு. வரேன்.'' என்று கிளம்பினாள். இறுதியாகப் பேசியது பேச்சாக இல்லாமல் ஒரு சவுக்காகி சொடேர் என்று அவர் முதுகில் சுண்டினாற்போல் இருந்தது.

'வாழ்க்கையை ரஞ்சனி ஊடுருவிப் பார்க்கக் கற்றுக் கொண்டு விட்டாள். அதனால்தான் அவள் நிற்கிறாள், நான் விழுந்து விட்டேனோ?'

சிவராமகிருஷ்ணனுக்குள்ளும் ஒரு புதிய மின்னல்!

# 13

சாமிக்கண்ணு வண்டி கட்டிக் கொண்டு அந்த வீட்டு முன் வந்து நின்றான். கூடவே அவனது சகாக்கள்.

வண்டியில் கடப்பாரை, மண்வெட்டி, இரும்புச் சருவம், தூக்குச்சட்டி என்கிற கட்டுமானப் பொருட்கள்.

சண்முகம் கதவைத் திறந்துவிட்டான்.

ஓடோடி வந்தபடி இருந்தாள் பாண்டியம்மாள்.

''சம்மு... சம்மு...'' என்று நெருங்கி வந்து மூச்சினை பிய்ச்சியடித்தாள்.

''என்னா பாண்டியம்மா...?''

''என்னாது... ரிப்பேர் பண்ணப் போறியா இல்ல ஊட்டை இடிக்கப் போறியா...?''

''எதுக்கு கேக்கறே...?''

''நான் அன்னிக்கு அவ்வளவு சொல்லியும் இந்த ஊட்டுக்கு வர உனக்கு எப்படி மனசு வருது?''

''இதோ பார்... நீ சொன்னதெல்லாம் உண்மையாவே இருக்கட்டும். அதுக்காக சொத்து என்னதுன்னு ஆன பிறகும் வீட்டை அப்படியே போட்டு வெச்சா யாருக்கு நஷ்டம்?''

''அது சரி... ஆவி அலையற ஊட்டுக்கு யார் குடிவருவா?'' - பாண்டியம்மாள் சத்தம் போட்டு கேட்ட கேள்வி சாமிக்கண்ணுவின் பிடறியைப் பிடித்து திருப்பியது.

''என்னது... ஆவி அலையற வீடா...?'' - கையில் கடப்பாரையோடு உள்ளே போகப் பார்த்தவன் திரும்பி வந்தான்.

''சாமிக்கண்ணு! இந்தம்மா ரீல் உட்றாங்க. நீ போய் வேலையப் பார்'' - சண்முகம் சாமிக்கண்ணுவை திருப்பிவிடப் பார்த்தான்.

''இரு சம்முகம். இந்தம்மா என்ன சொல்லுதுன்னு கேப்போம். ஆமா ஆவி அலையறத நீ பார்த்தியா?''

''பாத்தேனாவா... போங்க போங்க... போய் அவஸ்தைப்படுங்க...''

''தா... இப்படி மொட்டையா எதையாவது பேசாதே. விபரத்தைச் சொல்லு...''

''என்னாத்த சொல்ல. சண்முகத்தையே கேளு.''

''பாண்டியம்மா! நீ சும்மா இருக்கமாட்டே... நீ போப்பா...''

''இருப்பா... இந்த மாதிரி வீடு வாசலுக்கு கெட்ட பேர் உண்டாக்கறவங்களை சும்மா விடக்கூடாது. பிரிச்சு மேயணும். அப்பதான் இவங்களுக்கெல்லாம் புத்தி வரும்.''

''என்னாது... எனக்கு புத்தி வரணுமா? சரிதான்.

பாவப்பட்டு நல்லதைச் சொன்னா என்னக் குத்தம் சொல்றீங்களா... போங்க... போய் நீங்களே அவஸ்தைப்படுங்க...''

பாண்டியம்மாள் திரும்பி ஓடினாள். சண்முகத்துக்கு தர்மசங்கடமாகிப் போனது.

''சாமிக்கண்ணு அது ஒரு கிறுக்குப்பா... நீ வேலைய ஆரம்பி...''

''இல்ல சம்முகம். நீதான் எதையோ மறைக்கறே. அன்னிக்கு நீகூட பேய்பிசாசு பத்தி என்னாண்ட கேட்டே. நீ யதார்த்தமா கேக்கறதாதான் நினைச்சேன். இப்பல்ல புரியுது.''

''இப்பவும் சொல்றேன். இது சொன்னதை வெச்சுத்தான் நான் அப்படி கேட்டேன். மத்தபடி அதை நம்புனா யாருக்கு நஷ்டம்?''

''ஒருவேளை இது சொல்றதும் உண்மையா இருந்துட்டா...?''

''உண்மையாவா... அதெல்லாம் பொய்யி...'' - சண்முகம் சமாளிக்கப் பார்த்தான். அதே சமயம் உள்ளே போன சாமிக்கண்ணுவின் - சித்தாள் பெண் ஒருத்தி அலறிக் கொண்டு வெளியே ஓடிவந்தாள்.

''என்னா புள்ள...?''

''உள்ள என்னென்னமோ கிடக்குது?''

''என்ன கிடக்குது...?''

''கைவிரலு, கால்விரலுன்னு...'' - அவள் நடுங்கினாள். சாமிக்கண்ணுவும் சண்முகமும் உள்ளே சென்று பார்த்தார்கள். உண்மைதான். ஒரு மூலையில் மனித உடலின் கைவிரல்கள், கால் விரல்கள் துண்டு துண்டாக...

பகீர் என்றாகிவிட்டது!

''இதுக்கு என்ன சொல்றே...?'' சாமிக்கண்ணு கேட்டான்.

''என்ன சொல்றேன்னா... இதெல்லாம் ஆவி வேலைங்களாா?''

''பின்ன... இங்க ஏதோ கோளாறு இருக்குது.''

சாமிக்கண்ணுவும் மிரளத் தொடங்கினான்.

''சரி என்ன பண்ணலாம்கறே?''

''ஒரு மந்திரவாதிய கூட்டிகிட்டு வந்து முதல்ல பூசையைப் போடு. அந்த ஆள் இங்க அலையற ஆவியை புடிச்சிகிட்டு போகட்டும். அப்புறமா நான் வந்து வேலையை ஆரம்பிக்கிறேன்.''

''சாமிக்கண்ணு...''

''என்னா சாமிக்கண்ணு? பூட்டி வெச்ச வீட்டுக்குள்ள ஆவிங்க அண்டும்னு நான் கேள்விப்பட்டிருக்கேன். அது உண்மையாயிடிச்சு. நான் சொல்றத செய்.''

''அப்ப வேலை...?''

''முதல்ல பூசை... பொறவுதான் வேலை!''

- சாமிக்கண்ணு வந்த ஜோரில் கொண்டு வந்த சாமான் செட்டுகளை திரும்ப வண்டியில் ஏற்றிக் கொண்டு திரும்பத் தொடங்கினான்.

சண்முகத்துக்கு எரிச்சலாக வந்தது.

நிமிர்ந்தான். எதிரில் ஆசாரி.

''வாய்யா... வந்துட்டியா?''

''என்ன சிக்கல் சண்முகம்...?''

''ஊட்ல ஆவி நடமாட்டம் இருக்குதாம். அந்த நெக்லஸோட ராசி எப்படி எல்லாம் வேலை செய்யுது பார்த்தியா?''

''நான் எங்கப்பா அதுக்கு ராசி இருக்குதுன்னு சொன்னேன். பேப்பர்ல படிச்சதை சொன்னேன்.''

''சரி இப்ப என்ன பண்ணலாம்கறே?''

''என்ன பண்ணலாம்னா... நெக்லஸைக் கொடுத்தது ஒரு சாமியார். சரியான சித்து வேலை செய்யற ஆள் அந்த சாமியார். சித்து வேலைன்னாலே மாய மந்திரம்தானே?''

- ஆசாரியிடம் விவரிப்பு. சண்முகத்துக்கு இதயப் பகுதியில் தீப்பிடிக்கத் தொடங்கியது.

''நல்ல வேளை... அதை நான் வாங்கிட்டு உனக்கு பணத்தைக் கொடுக்காம விட்டேன். இல்லாட்டி என்னையும் ஆவிங்க பிடிச்சு ஆட்ட ஆரம்பிச்சிருக்கும்.

''என்ன ஆசாரி நீ... எதையுமே கண்ணால பார்க்கலை.

அதுக்குள்ள வேகமா முடிவுக்கு வரே?''

''இதோ பார்... சாமியாருங்க சமாச்சாரமே இப்படித்தான். நெக்லஸை சாமியார் யாருக்கு கொடுத்தாரு?''

''திருட்டு போச்சே அந்த ஊட்டு பொம்பளைக்கு.''

''அது வந்த நேரம் அந்த பொம்பளையோட மத்த நகை நட்டும் போயிடிச்சு. இதுல இருந்தே அது பேஜார் புடிச்சதுன்னு தெரியலியா?''

''இதை சொல்லத்தான் வந்தியா?''

''நான் உன்னை நோட்டம் போட வந்தேன். இருக்கையா இல்ல நெக்லஸோட ஓடிட்டியா, என்ன பண்றேன்னு பாக்க வந்தேன். ஆனா நீ இப்ப இப்படி சிக்கிகிட்டு இருக்கே...''

''சரி என்ன பண்ணலாம் சொல்லு.''

''முதல்ல அந்த நெக்லசை தூக்கி எறி. அதுதான் உன்னை இப்படிப் படுத்துது. அதுவந்த நேரம்தான் ஒரு பேய் அலையற வீடு உனக்கும், நல்ல வீடு உன் அப்பா வோட சின்னவீட்டு பசங்களுக்கும்னு ஆயிடிச்சு!''

- ஆசாரி மிரட்டிய மிரட்டிலில் சண்முகத்துக்கு அழுகையே வந்துவிட்டது.

''என்னய்யா இப்படி பீதியை கிளப்பி உட்றே?''

''தப்பா சொல்ற சண்முகம்... உன் நல்லதுக்குச் சொல்றேன். இந்த நெக்லஸ் பத்தி நான் யார்கிட்டையும் சொல்லமாட்டேன். அப்படி சொன்னா இவ்வளவுநாள் ஏண்டா சொல்லலை களவாணின்னு என்னையும் திருப்பிக் கேப்பாங்க. அதனால என்ன நினைச்சு பயப்படாதே. முதல்ல நான் சொன்னதைச் செய்...''

''அதை தூக்கிய எறியச் சொல்றியே... எங்க தூக்கி எறிய?''

''என்ன கேள்வி கேக்கறே நீ... அதை எந்த குப்பைத் தொட்டியில இருந்து எடுத்தியோ அந்த குப்பைத் தொட்டியலையே போடு.''

''பத்து லட்ச ரூபா மதிப்புங்கறே. தூக்கிப்போடச் சொல்றியே.''

''சரி நீயே வெச்சுக்க, பாடாப்படு. எனக்கென்ன வந்தது. ஆனா ஒண்ணு இதை என்கிட்ட கொண்டு வந்து காமிச்சதையோ நான் சொன்னதையோ நீ யார்கிட்டையும் சொல்லக்கூடாது. இப்ப சொல்றேன் கேட்டுக்க. நீ என்னைப் பாக்கல. நெக்லஸ் பத்தி என்கிட்ட எதுவும் பேசலை. ஞாபகம் வெச்சுக்கோ. உன் சிக்கல்ல என்ன இழுத்துவிடாதே...'' - என்றபடி சண்முகத்தின் அந்த பழையவீட்டை ஒருபார்வை பார்த்தான். ஜன்னல் வழியே வெள்ளைச் சேலை பளிச்சிட ஒரு பெண்ணின் முகம்.

''ஆமா யாரது உள்ள?'' - கேள்வி கேட்டுவிட்டு நிமிர்ந்தால் அந்தப் பெண்ணைக் காணவில்லை.

''யாரைக் கேக்கறே?''

''உள்ளார ஜன்னலாண்ட ஒரு பொண்ணு உருவம் தெரிஞ்சிச்ச. வெள்ளைச் சேலையோட...''

''அப்படியா...?'' - கேள்வியோடு கூடி வெளிறிப் போனது சண்முகத்தின் முகம். ஆசாரி மெல்ல உள்ளே சென்று பார்த்தான். யாரையும் காணவில்லை. கண்ணில் கைவிரல்களும், கால் விரல்களும் பட்டன. உடம்பில் தந்திக்கம்பிபோல நடுக்கமும் தொற்றிக் கொண்டது. ஓட்டமாய் நடந்து வெளியில் வந்தான்.

''சந்தேகமே இல்லை. உள்ள ஆவி நடமாட்டம் இருக்குது. நான் வர்றேன். நீ எக்கேடோ கெட்டுப்போ...'' - என்றபடி ஓடினான்.

தூரத்தில் இருந்தபடி பாண்டியம்மாள் பார்த்துக் கொண்டிருந்தாள். திரும்பவும் நெருங்கி வந்தாள். சண்முகம் அவளை முறைத்துப் பார்த்தான்.

''முறைக்காதே... நான் உன் அம்மா மாதிரி. நல்லதுக்குத்தான் சொல்வேன். இப்போதைக்கு அந்த ஊட்டுல கை வைக்காதே... ஒரு அஞ்சாறு மாசம் போவட்டும். எனக்கு தெரிஞ்ச ஒரு சாமியார் இருக்குறாரு. அவரு வடக்க காசி யாத்திரை போயிருக்காரு. அவர் திரும்பி வரட்டும். அவரை வெச்சி பூசைபோட்டா அந்த மோகினிப் பிசாசு ஓடிப்போயிடும். என்னா?''

- அவள் அதட்டலாக கேட்டாள். கோயில் மாடுபோல தலையை ஆட்டினான்.

''போ... போயி பூட்டி சாவியை எடுத்துகிட்டு திரும்பிப் பாக்காம போயிடு.''

''சரி...''

- திரும்பி நடந்தான். கதவை இழுத்து பூட்டப் போனான். கதவு மூலையில் பெருச்சாளி ஒன்று குந்தியிருந்தது. அவன் கதவை இழுக்கவும் பாய்ந்து ஓடியது. கறுப்பாய் ஒரு உருண்டை உருண்டு ஓடினமாதிரி இருந்தது. நெஞ்சிலும் திம்மென்று ஒரு குத்து விழுந்தது போலாகிவிட்டது.

''சனியனுங்க...'' என்றபடி கதவை இழுத்தான். கதவு வரமறுத்தது. கீழே ஏதோ ஒன்று தடுத்தது.

குனிந்து பார்த்தான். மஞ்சளாய் டாலடித்தது ஏதோ ஒன்று. கையில் எடுத்தான். முத்திரை பதித்த தங்க பிஸ்கட்!

''ஆத்தாடி...!'' தன்னையறியாமல் கத்திவிட்டான்!

# 14

ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர் சப்-இன்ஸ்பெக்டரையும் ஹெட்கான்ஸ்டபிளையும் கட்டி ஏறிக் கொண்டிருந்தார்.

''இன்னுமா அந்த திருட்டுப் பசங்கள நீங்க பிடிக்கல?''

''என்ன சார் நீங்க... அவங்க இருக்கற இடம் தெரிஞ்சா சும்மா இருப்போமா?''

''கண்டு பிடிக்கணும்யா.... கண்டுபிடிக்கணும். கமிஷனர் கூப்பிட்டு லெஃப்ட் ரைட்டு என்னை வாங்கிட்டார்.''

''அவருக்கென்னசார்... உக்காந்த இடத்துல கத்துவாரு, ஆனா இந்த காலத்து திருட்டுப் பசங்கதான் எமகாதகனுங்களா இருக்கானுங்களே...''

''ஒரு பெரிய வேட்டைக்கு பிறகு பக்கத்து ஸ்டேட்டுக்கு ஓடிப் போயிட்றாங்க...''

''நீங்களும் பக்கத்து ஸ்டேட் போலீசுக்கு தகவல் தாங்க... பீகார் போலீஸ் இங்க வந்து நம்ம உதவியோட அவங்க ஊர் திருடங்களைப் பிடிக்கல?''

''இன்ஃபர்மேஷன் கொடுத்திருக்கோம் சார். ஆந்திரா பக்கம் பெல்லாரில ஒரு திருட்டு நடந்திருக்கு. ஆளுங்களையும் பிடிச்சிருக்காங்க. நம்ம ஸ்டேஷன்ல நாம எடுத்த ஃபிங்கர் ப்ரிண்ட்டும் அவங்க எடுத்ததும் ஒத்துப்போகுதாம்.''

''அப்ப அங்க போய் விசாரிக்க வேண்டியதுதானே?''

''இன்னிக்கு கிளம்பறதா இருக்கோம் சார்.''

''இதெல்லாம் நான் கேட்டாதான் சொல்வீங்களா?''

''உங்களுக்கு தெரியும் சார். நேத்துகூட சொன்னோம். ரிப்போர்ட் பேப்பர் உங்க டேபிள்ளதான் இருக்கு. நேத்து நீங்க கொஞ்சம் மப்புல இருந்ததால சரியா கவனிக்கலை போல இருக்கு.''

''மப்பாவது... கப்பாவது... என்னையே குத்தம் சொல்றீங்களா. போங்கய்யா...''

- அலறி முடித்துவிட்டு டேபிளில் அமர்ந்து ரிப்போர்ட்டை பார்த்தார். வாஸ்தவம்தான்!

'அப்படியானால் பெல்லாரியில் அகப்பட்டிருக்கும் கூட்டம்தான் இங்கும் கைவரிசையை காட்டியிருக்குமோ?'

''இங்க வாங்கய்யா...?'' - சீட்டுக்கு திரும்பிச் சென்று அமர்ந்தவர்களை திரும்ப அழைத்தார்.

அவர்களும் திரும்பி வந்து கூடி நின்றனர்.

''நானும் வர்றேன். டிக்கெட்டுக்கு சொல்லியாச்சா?''

''சொல்லிட்றேன் சார்...''

''கமான் க்விக்!''

- ஹெட்கான்ஸ்டபிள் அடுத்த நொடி தொலைபேசியை சுழற்றத் தொடங்கினார்.

# 15

''ஏண்டா கண்ணு ஒரு மாதிரி இருக்கே?'' - திலகம் சண்முகத்தை நெருங்கி வந்து தலையை வருடிவிட்டாள்.

''ஒண்ணுமில்லம்மா...''

''அப்ப நிறைய இருக்குன்னு அர்த்தம் - என்ன விசயம்?''

- அவள் அவன் எதிரில் சப்பணமிட்டு அமர்ந்தாள்.

''அம்மா...'' சண்முகம் கேவலுடன் பார்த்தான். இமைக்குள் கண்ணில் கண்ணீர்ப்பசை.

''அழுவுறியா?''

''கொஞ்சம் போனா அழுதுடுவேம்மா...''

''ஏய்யா?''

''நாம யாருக்கு என்ன கெடுதல்மா பண்ணோம்... ஏம்மா கெட்ட நேரம் நம்மை இந்த துரத்து துரத்துது.''

''விவரமா சொல்லுய்யா...''

- அவன் தங்க பிஸ்கட்டையும் நெக்லஸையும் எடுத்து நீட்டினான்.

''ஏது இது?''

- அவன் சொல்லி முடித்தான்.

''ஏய்யா... இதை முதல்லையே சொல்றதுக்கென்ன?''

''நான் ஒருத்தன் கஷ்டப்பட்றது போதாதாம்மா...''

''போடா பைத்தியக்காரா... உன்னை தங்கம் துரத்துதுடா. நீ அதிர்ஷ்டக்காரன்.''

''அட போம்மா... எனக்கு ஒரே குழப்பமா இருக்குது.''

''என்ன குழப்பம். முதல்ல சங்கிலி, அப்பால தங்க பிஸ்கட். இன்னும் என்னென்ன கிடைக்கப்போகுதோ?''

''நான் சொல்றேன். போலீஸ் வந்து பிடிச்சுகிட்டு

போகப் போகுது. ஆறுமாசமோ, ஒரு வருசமோ தண்டனை கிடைக்கப்போகுது.''

''ஏன் அப்படி நினைக்கறே... வா ஊட்டுக்கு போய் அங்க என்னன்னு பாப்போம்.''

''வேணாம்மா... நீ வந்தா பயந்துடுவே.''

''மண்ணாங்கட்டி. அது நான் வாழ்ந்த ஊடு. நீ பொறந்த ஊடு.''

''அதெல்லாம் முந்தி. இப்ப அங்க பேயும் பிசாசும் சுத்திகிட்டு இருக்கு. நான் பார்த்தேன். ஆசாரி பார்த்தாரு, மேஸ்திரி பார்த்தான்.''

''நானும் பாக்கறேனே...?''

''வேணாம்மா...''

''சரி என்னதான் பண்ணப் போறே?''

''தெரியலம்மா, இப்படி கைல தங்கம் பொத்து பொத்துன்னு வந்து விழுந்தா என்னம்மா பண்ண...?''

''அப்ப அந்த ஊட்டுல தங்கம் இருக்குன்னு அர்த்தம்?''

''பேயும் இருக்குதே...''

''பாண்டியம்மாளைப் பத்தி உனக்குத் தெரியாது. அவ பையன் ஒரு கேப்மாரி. வருசத்துல பாதி நாள் ஜெயில்ல இருக்கறவன். அவ சொல்றத நீ நம்பாதே.''

''அவ பையன் ஜெயில்ல இருக்கறதுக்கும், அவ சொல்றதுக்கும் என்ன சம்மந்தம்?''

''என்னடா கண்ணு நீ... யோசிக்கவே மாட்டியா? அவதாண்டா ஏதோ தப்பு பண்றா?''

''அவளா?''

''ஆமாம். நீ வா - மத்ததை அங்கையே வெச்சுப் பேசுவோம்...''

திலகம் அவனைக் கூட்டிக் கொண்டு கிளம்பினாள். அவனும் அரை மனதாக புறப்பட்டான்.

க்ரீச்ச்...!

கதவு திறந்து கொண்டது. திலகம் தைரியமாக உள்ளே காலை வைத்தாள். சில விநாடி மொத்த வீட்டையும் ஒரு

பார்வை பார்த்தாள்.

நூலாம்படை - சிலந்தி - தூசு - தும்பு - எலி - நச்சாளி - வெளவால்... எல்லாமே கண்ணில்பட்டன

மாடப்பிறை தூர்ந்துபோயிருந்தது.

''இங்கதான் தினம் விளக்கேத்துவேன்...'' கையைக் காட்டினாள்.

ஜல்ஜல்ஜல்...! யாரோ ஓடும் சப்தம் கேட்டது.

''அம்மாம்மா... சத்தம் கேட்டுச்சா...?''

''கேட்டுச்சு... கேட்டுச்சு... நீ பதட்டப்படாதே, அந்த பேய் எதிர்க்க வரட்டும்.''

''எப்படிம்மா பயப்படாம இப்படி பேசறே?''

''அடப்போடா... எவ்வளவு சினிமா பாக்கறே. யோசிச்சுப் பாருடா...''

- அவள் சொல்லி முடிக்குமுன் 'ஸ்ஸ்ஸ்' என்று ஒரு சீற்றம். ஜன்னல் கம்பிகளை வளைத்துக் கொண்டு நாகம் ஒன்று சீறிக் கொண்டிருந்தது.

''அம்மா பாம்பு...''

''பாம்புதான். பாழும் வீடாகிப் போச்சில்லயா. அதான் பதுங்கி வாழ இங்க வந்துடிச்சு.''

''அம்மா... பயமா இருக்கும்மா... உனக்கு எதாவது ஆயிடப் போவுதும்மா...''

''எந்தப் பாம்புமே நாம ஏதாவது பண்ணாதான் நம்மக் கடிக்கும். நீ வேடிக்கை பாரு, அது போயிடும்.''

- திலகம் சொன்னது வாஸ்தவம்தான் என்பதுபோல அந்தப் பாம்பு ஜன்னல் கம்பியை விட்டு இறங்கி அந்த பக்கமாய் உள்ள புதருக்குள் நுழைந்து மறைந்தும் போனது.

''யாரது...?'' - வீட்டுவாயில் புறமிருந்து கேள்வி ஒன்று நுழைந்தது. திரும்பிப் பார்த்தாள். பாண்டியம்மாள் நின்று கொண்டிருந்தாள்.

''வாடி... பாண்டியம்மா... வா! வா.''

-திலகம் உற்சாகமாக அழைத்தாள்.

''யாரு திலகமா... என்னாதிது? உன் மவன் உன்கிட்ட ஒண்ணும் சொல்லலியா?'' -கேட்டபடி அவளும் உள்ளே

வந்தாள்.

''சொன்னான்.... சொன்னான்... நீ ரொம்பதான் அவனை மிரட்டியிருக்கே போல இருக்குதே?''

''அடிப்பாவி... நல்லதைச் சொன்னேன். என்னைப் போய் குத்தம் சொல்றியே?''

''அது சரி... உன் மவன் இப்ப என்ன பண்றான்?''

''வா... வெளிய போய் பேசுவோம். இங்க வேண்டாம்.''

''ஏண்டி...''

''அதான் சொன்னேன்ல... இந்த விட்டத்துல தொங்குன ஒருத்தி இங்கையே சுத்திச் சுத்தி வந்துகிட்டிருக்கா...''

''அப்படியா?''

''என்ன அப்படியா...உன் மகன் சொல்லலையா? எலே சண்முகம் நீ அந்த விசயத்தை சொல்லலியா?''

''சொன்னேன் பாண்டியம்மா... அம்மாதான் நம்பாம வா காட்டுன்னு கூட்டிகிட்டு வந்துட்டாங்க. இப்பக்கூட ஜல் ஜல் சப்தம் கேட்டுச்சு...''

''அடக் கெரகமே... திலகம்... வந்துடு திலகம். இங்க நின்னு பேச வேணாம்...''

''சரி நீ போ... நான் வர்றேன்.''

-திலகம் பதட்டமேயில்லாதபடி பதில் சொல்லிவிட்டு புதிதாக பூசினாற்போல் தெரிந்த சுவரில் கையை வைத்தாள்.

பாண்டியம்மாள் போகாமல் நின்றாள்.

''உன்னத்தான்... போவரேன்னு சொன்னேன்ல?''

திலகம் கடுமையான குரலுக்கு மாறினாள். பாண்டியம்மாளுக்கு வெலவெலத்துவிட்டது. அதன்பின் திலகம் என்ன நினைத்தாளோ... ''சரி வா போகலாம்.'' என்று அவளோடு வெளியேறினாள். சண்முகம் பெருமூச்சு விட்டான். மீண்டும் கதவைச் சாத்தி பூட்ட ஆயத்தமானான். பூனை ஒன்று விட்டத்தில் குர் என்று பார்த்துக்கொண்டிருந்தது. அதன்காலில் ஏதோவளையம்.

சண்முகத்துக்கு கண்ணைத் தெறித்தது.

'ஸ்ச்சூ!' விரட்டினான். பாய்ந்து குதித்தபோது அந்த வளையம் ஸ்லோ மோஷனில் நழுவி கீழே புழுதித் தரையில் விழுந்தது.

ஓடிப்போய் எடுத்துப் பார்த்தான்.

தங்க வளையல்! மேல் பாகம் முழுக்க சிவப்பு ரத்தினக் கற்கள்.

சண்முகத்துக்குள் ஒரு பட்சி படபடவென்று பறக்கப் பார்த்து அவன் மன அறையில் முட்டி மோதியது.

''அம்மா...'' - பிளந்தவாயோடு திரும்பினான். திலகம் பாண்டியம்மாளோடு வீட்டின் மதில் சுவருக்கு வெளியே முருங்கை மரம் ஒன்றின் கீழ் நின்று கொண்டு சுவாரஸ்யமாக பேசிக் கொண்டிருந்தாள்.

வளையலை சட்டைப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு அவளை நோக்கி ஓடினான்.

''நான் சொல்றத நம்பு திலகம்... நான் அந்த பொண்ணு தூக்குல தொங்கறதை கண்ணால பார்த்தேன்.''

- பாண்டியம்மாள் அன்று சண்முகத்திடம் சொன்னதையே ஒப்பித்துக் கொண்டிருந்தாள். திலகமும் ''இப்படி விலாவரியா இவன் சொல்லவேயில்லை பாண்டியம்மா... சரி நான் நீ சொன்ன மாதிரி அஞ்சாறு மாசம் கழிச்சு மந்திரவாதியை கூட்டிக்கிட்டு வந்து பூசை போட்டுட்டு அப்புறமா வீட்டை இடிக்கறேன். சரிதானே?'' - திலகம் கேட்க பாண்டியம்மாளும் தன் வெற்றிலைக்காவிப்பல் வெளித் தெரிய தலையை ஆட்டி ஆமோதித்தாள்.

''ஆமாம்... உன் பையன் இப்ப என்ன பண்றான்?'' - திலகம் பாண்டியம்மாள் மகன் பற்றிக் கேட்கவும் அவள் முகத்தில் சுட்ட கத்திரிக்காய் போய் வதங்கல். இருந்தும் சமாளிப்பாக வாயைத் திறந்தாள்.

''அவன் இப்ப இந்த ஊர்லையே இல்ல திலகம். வடக்க ஒரு வேலை கிடைச்சிருக்குதுன்னு அங்க போயிட்டான்...''

''அப்படியா... நல்லா இருந்தாசரி... அப்ப நான் வரட்டுமா?''

- திலகம் வெட்டிக் கொண்டு திரும்பினாள். சண்முகம் திருதிரு விழியோடு.

''வாடா போகலாம்...''

- அவனையும் இழுத்துக் கொண்டு நடந்தாள்.

வழியிலேயே அந்த தங்க வளையலை எடுத்துக் காட்டினான்.

''அம்மா இன்னிக்கு இதை பூனை போட்டுச்சு,'' - திலகமும் வாங்கிப் பார்த்தாள்.

''என்னம்மா இது... எலி, பூனை எல்லாம் கூட நம்ம வீட்ல தங்கம் போடுதேம்மா...''

''போடும் போடும்... விக்கிரமாதித்தன் கதைல வர்ற புதிர் மாதிரியே இருக்குதுல்ல.''

''யாருக்கு தெரியும் அந்த கதை எல்லாம். இப்ப நான் பயப்பட்றதுக்கு காரணம் தெரியுதா உனக்கு?''

''நல்லாவே தெரியுது... ஆனாலும் வெள்ளந்தியா இருக்கியே. இந்த காலத்து பையனே இல்ல நீ. உன்னை நான் அப்படி வளத்துட்டேன்.''

''என்னம்மா என்னென்னமோ சொல்றே... இப்ப என்னம்மா பண்ண?''

''அந்த மிச்ச நகைங்களையும் எடுத்துக்கோ. நேரா போலீசுக்கு போவோம்.''

''போலீசுக்கா...?''

''பின்ன... வித்து வாயில போட்டுக்கலாம்னு ஆசைப்பட்றியா?''

''சத்தியமா இல்லை. போலீசுக்கு போனா மத்த நகை எல்லாம் எங்கேன்னு கேட்டு துளைச்சு எடுப்பாங்களே!''

''அதுவும் நம்ம ஊட்லதான் இருக்குது.''

''நம்ம ஊட்டுலையா... நம்ம ஊட்ல நெக்லஸ் மட்டும் தாம்மா இருக்குது.''

''நம்ம ஊட்ல இப்ப ஒரு புதையலே இருக்குடா. அந்த இடிஞ்சு கிடக்கற ஊடும் நம்ம ஊடுதானே?''

''புரியலையேம்மா...''

''என்ன புரியலை? இதெல்லாம் எங்க கிடைச்சிச்சு?''

''அங்கதான்...''

''கூட்டிக் கழிச்சுப்பார்...''

''புரியுதும்மா... அங்க நகைங்க இருக்குதுங்கறே. போலீஸ் நம்புமா?''

''இப்ப போய் சொல்ற விதத்துலதான் எல்லாம் இருக்கு.''

''வேண்டாம்மா... அந்த திருட்டுப் பசங்கள போலீஸ் பிடிக்கட்டும். அப்பதான் நெக்லஸ் குப்பைத் தொட்டியில கிடைச்சதை போலீஸ் ஒத்துக்கும்.''

''தப்புடா கண்ணு. இந்த மாதிரி விஷயத்துல தாமதம் பண்ணக்கூடாது. நீ அப்பவே என்கிட்ட சொல்லியிருந்தா நான் அன்னிக்கே இதை பண்ணியிருப்பேன்.''

''எப்படிம்மா... நாம பொய் சொல்றதா நினைக்காதா?''

''ஒண்ணு தெரிஞ்சுக்கோ. உண்மைக்கு எப்பவுமே அழிவு கிடையாது. பேசா வா என்கூட...''

- திலகம் ஒரு புதுமைப் பெண்ணாய் - சராசரித்தனங்களை எல்லாம் மீறிக் கொண்டு பேசினாள். அவனையும் இழுத்துக் கொண்டு நடந்தாள்!

---

# 16

---

போலீஸ் ஸ்டேஷன்!

டேபிள்மேல் வைர நெக்லஸ், அடகு வைத்த சங்கிலி, தங்க பிஸ்கட், ரத்தின வளையல்! ஏட்டு அவ்வளவையும் பார்த்து வாயைப் பிளந்திருந்தார். திலகம் என்ன நடந்தது என்பதை எழுதியே எடுத்து வந்திருந்தாள்.

''இதுல எழுதி இருக்கறதை எல்லாம் படிச்சா இப்படிக்கூட நடக்குமோன்னு இருக்குது.''

''நடந்திருக்குது சார். அதுக்குப் பேர்தான் வாழ்க்கை!''

''சரி இப்ப நீங்க என்ன சொல்றீங்க. உங்க பாழடைஞ்ச

ஊட்டுல திருட்டு நகை எல்லாம் இருக்குன்னு சொல்றீங்களா?''

''அப்படித்தான் எனக்குப்படுது. அதுக்கு காவலா அந்த பாண்டியம்மா யாரோ ஒரு பெண்ணை 'செட்-அப்' பண்ணி அங்க தங்க வெச்சு ட்ராமா போட்டுகிட்டு இருக்கா...''

''அவ ஏன் அப்படி பண்ணனும்?''

''அவ பையன் ஒரு திருடன். அநேகமா எங்க ஏரியாவுல திருட்டுப்போன வீட்டுல அவனும் சேர்ந்து திருடியிருக்கணும்.''

''இப்ப அந்த பய எங்க இருக்கான்?''

''பாண்டியம்மா அவன் வடக்க போய்ட்டதா சொல்றா. நகைங்களை அந்த வீட்டுல பதுக்கி வெச்சுட்டு அம்மாவையும் பாத்துக்க சொல்லிட்டு அவன் திருட்டுக் கூட்டத்தோட வடக்க போயிருக்கணும். அதான் அவ அப்படி சொல்றான்னு நான் நினைக்கறேன்.''

திலகம் டிபார்ட்மென்ட்டில் இருப்பவள்போல கணக்குப்போட்டுச் சொன்னாள்.

''சரி கிளம்பு... அதையும் பாத்துடுவோம்.''

ஏட்டு அடுத்த நொடி நான்கைந்து கான்ஸ்டபிள்களோடு புறப்பட்டுவிட்டார்.

சீறிக்கொண்டு வந்து நின்ற ஜீப்பைப் பார்த்துவிட்டு அரண்டு போனாள் பாண்டியம்மாள். திலகமும் கூடவே இறங்கவும் அவளுக்கு அமிலத்தைச் சப்பின மாதிரி ஆகிவிட்டது.

திலகம் போய் கதவைத் திறந்தாள்.

போலீஸ் கூட்டம் திபுதிபுவென்று உள்ளே நுழைந்தது.

பின்னால் காடாய் அடர்ந்து வளர்ந்திருந்த வேலிக்காத்தான் புதரிலிருந்து ஒரு பெண் குதித்து ஓடவும் காத்துக் கொண்டிருந்த மாதிரி ஒரு போலீஸ்காரர் அவளை கவ்விப் பிடித்தார்.

உள்ளே திலகம் சுட்டிக் காட்டிய இடத்தை எல்லாம் போலீஸார் இடித்தனர். அங்கெல்லாம் ஒரு பீங்கான் ஜாடி

புதைக்கப்பட்டு அதனுள் திருட்டு நகைகள்.

சில இடங்களில் தரையில் கூட புதைத்து வைத்திருந் தனர். எலி வளை ஒன்றைத் தோண்டியபோது அதில் மோதிரமும் சங்கிலியும் பிணைந்து கொண்டு கிடந்தன.

மொத்தத்தில்வீட்டில் தொட்ட இடமெல்லாம் பொன். தொட்டதெல்லாம் பொன்!

ஏட்டு ஒரு ஓரமாய்ப் போய் பிரமித்தபடி உட்கார்ந்துவிட்டார்.

சண்முகம் விக்கித்துப் போயிருந்தான்!

ஸ்டேஷனுக்குத்திரும்பியபோது இன்ஸ்பெக்டரும், சப்-இன்ஸ்பெக்டரும் பெல்லாரிக்கு போய் பிடித்து வந்திருந்த கூட்டம் லாக்கப்பில் இருந்தது.

''எவ்வளவு கேட்டாலும் வாயைத் திறக்க மாட்டேங் கறாங்கய்யா...'' என்ற இன்ஸ்பெக்டர் முன்னால் கொண்டு வந்த நகைகளை ஒரு மேஜைமேல் கொட்டி இன்ஸ்பெக்டரை ஒரு குலுக்கு குலுக்கினார் ஏட்டு!

''எங்கய்யா இருந்துச்சு இவ்வளவும்?''

''இந்தம்மாவுக்கு சொந்தமான பாழடைஞ்ச வீட்ல சார்...''

''எல்லாம் இவனுங்க திருவிளையாடலா...?''

''ஆமாம் சார். கூப்ட்டு காட்டுங்க. ஷாக் அடிச்ச மாதிரி ஆவட்டும்.''

- ஏட்டு சொல்ல அவர்களை இழுத்து வந்து மேஜை முன்னால் நிறுத்தினார்.

அவர்கள் ட்ரான்ஸ்ஃபார்மரையே தொட்டதுபோல வெலவெலத்துப் போனார்கள். பாண்டியம்மாளையும் ஒரு பன்றியை வளைத்துப் பிடிக்கிற மாதிரி பிடித்து வந்திருந்தனர்.

அவர் அலறிய அலறலில் ஸ்டேஷனின் உத்தரத்தில் இருந்ததெல்லாம் தூசியாய்க் கொட்டியது.

''சபாஷ்... யார் கொடுத்த க்ளூ இது?''

- திலகம் சண்முகத்தை முன்னால் தள்ளினாள். குப்பைத் தொட்டியில் கிடைத்த நெக்லஸ்தான்

ஆரம்பம் என்றாள்.

திருடிக்கொண்டு ஓடும்போது யாரோ வரவும் குப்பைத் தொட்டிக்குள் இறங்கி ஒளிந்து கொண்டதை ஒரு திருடனும் ஒப்புக்கொண்டான். அப்பொழுது பாக்கெட்டில் இருந்து நழுவி விழுந்திருக்க வேண்டும் என்றான்.

''ஏன் தம்பி அப்பவே இதை போலீஸ்ல ஒப்படைக்கல?''

- கேள்விக்கு சண்முகம் ஆசாரி சொன்னதை அப்படியே சொன்னான்.

''வாஸ்தவம்தான். இதை அப்ப ஒப்படைச்சிருந்தா கேஸே வேற மாதிரி திரும்பியிருக்கும். நீதான் திருடன்னு முடிவு பண்ணியிருப்போம். இப்படி பெல்லாரிப் பக்கமெலாம் போகவே தோணியிருக்காது'' - என்று பெருந்தன்மையுடன் போலீஸ் இன்ஸ்பெக்டரும் ஒப்புக் கொண்டார்.

''பரவால்ல தம்பி. எப்ப எதைச் செய்யணுமோ அதைச் செய்துருக்கீங்க. இவங்கள பிடிச்சதுக்குப் பிறகு நீங்க வந்திருந்தாலும் உங்க மேல சந்தேகப்பட்டிருப்போம். இவங்களும் உங்களைச் சொல்லி தப்பிக்க பாத்திருப் பாங்க. சரியான நேரத்துல சரியானபடி நடந்துகிட்டீங்க.'' - என்று சண்முகத்தை பாராட்டி கை குலுக்கினார்.

தப்புத் தப்பாய் நடந்து கொண்ட தனக்கு இப்படி ஒரு பாராட்டா...?

அவன் திலகத்தைப் பார்த்தான். போய் காலில் விழுந்தான்.

''அம்மா! எல்லாம் உன்னைத்தான் சேரணும்'' என்றான்.

''நீ வேற நான் வேறையாடா கண்ணு...''

''அம்மா...'' - அவளை கட்டிக் கொண்டான்.

அங்கே ஏழ்மையில் தங்கத்தைவிட கூடுதலான பளபளப்போடு நேர்மை மின்னியது. ஒளிக்கூத்தாடியது.

உள்ளே நுழைந்து கொண்டிருந்தாள் ரஞ்சனி. கூடவே சிவராமகிருஷ்ணன். இருவரும் நேராக சண்முகத்திடம் வந்து கைகளைப் பற்றி குலுக்கினார்கள்.

''உங்களுக்கு நாங்க ரொம்ப கடமைப்பட்டிருக்கோம்.
''பெரியவார்த்தைங்கஎல்லாத்துக்கும் காரணம் அந்த வைர நெக்லஸ்தான். அது பண்ணின மாயாஜாலம்தான்!''

- சண்முகம் சுட்டிக் காட்டினான். மகான் அருணாசல மூர்த்தி கொடுத்த அதே நெக்லஸ்.

''அது மட்டும் அன்னிக்கு குப்பைத் தொட்டியில விழலைன்னா என் பார்வைல பட்டிருக்காது. படலைன்னா இவ்வளவு தூரம் விஷயங்கள் நடந்துருக்காது. அந்த மழை நேரத்துக்குத்தான் நன்றி சொல்லணும்.'' என்றான்.

அவன் சொன்ன மழை நேரம் ரஞ்சனி காதில் அருள் மழை நேரமாக விழுந்தது.

''எப்படியோ டயத்துக்கு எல்லாம் நடந்து முடிஞ்சிடிச்சு. தாமதமாயிருந்தா கதையே மாறிப் போயிருக்கும்.''

- இன்ஸ்பெக்டரும் டயத்தைத்தான் குறிப்பிட்டார். ரஞ்சனி அர்த்த புஷ்டியோடு சிவராமகிருஷ்ணனைப் பார்த்தாள்.

சிவராமகிருஷ்ணன்சிரம் வெட்கத்தோடு வேறுபக்கம் திரும்பியது. மேஜை மேல் அந்த திருடர்கள் ரஞ்சனி வீட்டில் அபகரித்த தங்கம் என்றில்லாமல் பல இடங்களில் கொள்ளை அடித்த தங்கமும் சேர்ந்தே கிடந்தது. அந்தப் பொன்னை எல்லாம்விட பெரிய பொன்னாக காலம் அங்கே கண் சிமிட்டிக் கொண்டிருந்தது!

**- முற்றும் -**

ஜீயே பப்ளிகேஷனுக்காக ஜீயே பப்ளிகேஷனில் (பிரஸ்)
அச்சிட்டு வெளியிடுபவர் மற்றும் உரிமையாளர்
ஜி. அசோகன். முகவரி: 6/352, திருவல்லிக்கேணி
நெடுஞ்சாலை, சென்னை - 5.
தொலைபேசி: 8544294
ஆசிரியர்: ஜி. அசோகன்.